**PROTONTECH**

*Colour Photocopy Machines*




*Used in Abroad*
*New for Sri Lanka*

*175, Main Street*
*Trincomalee*

*075 6602486*



அலைவு 02 — இயம் 37 — May 10 - 16, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பக்கங்கள் : 16 — விலை : 30.00 — பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்



**மலைமுரசின் விளம்பரக் கட்டணம்**

| அளவு | முன்புறம் | பின்புறம் |
|---|---|---|
| A 7 | 650.00 | 500.00 |
| A 6 | 1175.00 | 975.00 |
| A 5 | 2200.00 | 1900.00 |
| A 4 | 4150.00 | 3800.00 |
| A 3 | 7950.00 | 6950.00 |
| அளவு | பக்கம் 02 | பக்கம் 15 |
| A 7 | 350.00 | 200.00 |
| A 6 | 575.00 | 475.00 |
| A 5 | 1100.00 | 900.00 |
| A 4 | 1950.00 | 1500.00 |
| A 3 | 3450.00 | 2950.00 |

ஏனைய பக்கங்கள் - ரூ.18 சதுர அங்குலம்


### சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ள

# வெருகல் சுற்றிவளைப்பு


வைப்பகப் படங்கள்

வெருகல் பிரதேசச் செயலகப் பிரிவின் ஈச்சிலம்பற்று கடற்கரையில் நடந்ததாகக் கடற்படையினால் வெளியிடப்பட்ட செய்திகளை அடுத்து வெருகல் பிரதேசத்தின் பல கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டமையானது ஒரு திட்டமிட்ட நடவடிக்கையோ என்ற சந்தேகம் கடுமையாக எழுந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வெளிவந்த செய்திகள் முன்னுக்குப் பின் முரணாக இருந்ததுடன் அங்குள்ள மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் முற்றிலும் முரணான செய்திகளைத் தந்துள்ளதே இவ்வாறான சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்மிரர் வெளியிட்ட செய்தியின் படி வெருகல் ஆறு கடற்படை முகாமில் 13

## பாடசாலைப் பரீட்சிப்பில் மாகாணக் கல்வித் திணைக்கள சாரதி ?

பாடசாலை வெளிவாரி மதிப்பீட்டிற்குச் சென்ற கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அலுவலர்களை ஏற்றிச் சென்ற சாரதியும் பரீட்சிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த 06.05.2014 அன்று திருகோணமலையிலுள்ள பாடசாலையொன்றுக்குப் மதிப்பீட்டிற்காக மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் சென்ற அணியினை ஏற்றிச் சென்ற வாகனச் சாரதியே இந்...... 13

**மாகாணக் கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை எடுப்பாரா?**

## க.பொ.த சாதாரண தரம்

# இலங்கையில் மட்டு மத்திய வலயம் முதலிடம்

### அம்பாறையில் திருக்கோவில்

### திருகோணமலையில் கிண்ணியா

நடைபெற்று முடிந்த கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற பெறுபேறுகளின் படி முழு இலங்கையிலும் அதி கூடிய சித்தி வீதத்தைப் பெற்றுக்கொண்ட மட்டக்களப்பு மத்திய வலயம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. 90.27 புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மட்டக்களப்பு மத்திய வலயம் இலங்கையில் அதிகூடிய சித்தி வீதத்தைக் கொண்ட வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

67.49 புள்ளிகளுடன் கிண்ணியா வலயம் தேசிய மட்டத்தில் 21ம் இடத்தையும்,கிழக்கில் 4ம் இடத்தையும் 13

## சம்பூர் காணிகளுக்கு 30 கோடி



திருமலை மாவட்டத்திலுள்ள சம்பூர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆக்கிரமிப்பை சட்ட பூர்வமான தாக்குவதற்கு அரசாங்கம் புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. ஆகிரமிக்கப் பட்டுள்ள 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்புக்கு 30 கோடி ரூபாவை நட்டவீடாக வழங்குவதுதான் அரசின் திட்டம் உலக தமிழ்ச் செய்தி இணையம் (globaltamilnews.net) தெரிவித்துள்ளது.


BANKING Classes



IABF

DABF

Started on 03.05.2014

VEAL BUSINESS COLLEGE

IBSL — INSTITUTE OF BANKERS OF SRI LANKA

159 A.SEA VIEW ROAD
TRINCOMALEE.
0262227622 , 0770203201


## தபோவனத்திடம் கையளிக்கப்பட்ட குழந்தைகள் விடுதலை

அவுஸ்த்திரேலியப் பயணத்தை மேற்கொண்டு இடைநடுவில் கைதான மக்களின் பதினைந்து குழந்தைகளும் தற்காலிகமாகத் தபோவனத்தின் பாதுகாப்பில் நீதிமன்றத்தால் கையளிக்கப்பட்டிருந்ததாகத் தெரிகின்றது.

கடந்த இரண்டாம் திகதி முல்லைத்தீவுக் கடலின் கிழக்குப் பகுதியில் இருபது 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

# கனேடிய அறிவிப்பின் உண்மைத்தன்மை

அண்மையில் கனடா ஓர் அறிவிப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் வன்முறைகள் வெடிக்கலாம் என்பதே அந்த அறிவிப்பாக இருக்கின்றது.

அதற்கான காரணங்களாக கனடா குறிப்பிட்டிருப்பது இலங்கையின் அடிப்படைப் பிரச்சனைகளுக்கான தீர்வுகள் ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதே.

இந்த அறிவித்தலை அரசோ அல்லது கருத்திற்கொள்ள வேண்டிய தரப்புக்களோ கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை.

அரசின் தலைவரோ வடக்கு கிழக்கில் இளைஞர் யுவதிகளின் உரிமைகளை பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டெடுத்துள்ளதாக அண்மையில் கூறியுள்ளார். ஆனால் அந்த உரிமைகள் மீள அந்த இளைஞர் யுவதிகளிடமேயே வழங்கப்பட்டுள்ளதா என்பதைப் பற்றி கிஞ்சித்தேனும் அவர் சிந்திக்கவில்லை.

இலங்கையில் இனப்பிரச்சனை இருக்கின்றது என்பதை முதல் முதலில் ஏற்றுக்கொண்ட சனாதிபதியாக சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவே உள்ளார். அவர் சாதாரணமாக அதனை ஏற்றுக்கொண்டிருக்க முடியாது. உண்மையில் அதற்கான அடிப்படைகள் இருந்தமையினாலேயே அவ்வாறு ஒரு பிரச்சனை இருந்தது என்பதை அவர் ஏற்றுக் கொண்டார்.

ஆனால் அதற்கு முன்னும் பின்னும் வடக்கு கிழக்கில் வாழும் மக்களின் , போராட்டம் பயங்கரவாத மூலாம் பூசப்பட்டது. அவர்களுக்குப் பிரச்சனை இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ள யாரும் முன்வரவில்லை. இப்போதும் கூட லட்சக் கணக்கில் மக்கள் அழிந்த பின்னரும் உள்நாட்டிலும் அரசு பிரச்சனை தீர்ந்துவிட்டது மக்கள் நிம்மதியாக வாழுகின்றார்கள் என்ற மேம்போக்கான கதைகளை அதிகாரத்தில் உள்ளவர்கள் வெளிப்படுத்திக் கொண்டிருக்க அண்மையில் நிறைவேற்றப்பட்ட ஜெனீவாத் தீர்மானத்திலும் இறுதியுத்தத்தில் ஐக்கிய நாடுகளின் சரத்திற்கு அமைவாக யுத்த நிபந்தனைகளை, யுத்தத்தில் ஈடுபட்ட இருதரப்பும் பின்பற்றவில்லை, அதாவது யுத்தக்குற்றச் செயல்கள் நடைபெற்றன என்ற வாதமே மேலோங்கி நிற்கின்றதேயொழிய இங்கு அடிப்படையில் பிரச்சனையொன்று இருக்கின்றது என்பதைப் பற்றிப் பேசவில்லை.

ஆக மொத்தம் யாருமே இந்நாட்டில் அடிப்படைப் பிரச்சனையொன்று உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை.

பிரச்சனையொன்றைத் தீர்ப்பதற்கான மிகவும் முக்கிய அணுகுமுறை என்னவெனில் அப்பிரச்சனைக்கான அடிப்படைக் காரணி எது என்பதைக் கண்டு அக்காரணியை இல்லாதொழிப்பதே.

அதனை யாரும் சிந்திப்பதாக இல்லை. யுத்தக் குற்றங்கள் நடைபெற்றுள்ளன என்பது நிரூபிக்கப்படுமானால் நடவடிக்கைகள் அவ்வாறு செய்தவர்களுக்கு எதிராக அமையப் போகின்றதே தவிர தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்பதற்கான ஏதுக்களைக் கண்டுகொள்ள அங்கு வாய்ப்பிருக்குமா என்பது கேள்விக்குறியே.

யுத்தக் குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்பட்ட பின்னர் அனைத்தும் அடங்கிவிடும். ஆனால் எமது வாழ்வியலில் யாதாயினும் மாற்றம் ஏற்படுமா? என்பதே கேள்விக்குறி.

எனவே மீண்டும் பாரபட்சம், தவிர்ப்பு, அடக்குமுறை, சட்டத்தின் தோல்வி என்ற நிலையே வடக்கிலும் கிழக்கிலும் நிலவுமாயின் கனேடிய எதிர்வுகூறலை அடுத்த தலைமுறை சிலவேளை தாங்கிச் செல்லலாம்.

தலையிடிக்குப் பெனடோலைக் கொடுக்கும் வரைக்கும் முரண்பாடுகள் தீரப் போவதில்லை..

# இணைப்பாடவிதானச் செயற்பாட்டிலும் முன்னேற்றம் காணும் கைலேஸ்வராக் கல்லூரி

கடந்த 2013 ம் ஆண்டு வைகாசி மாதம் தொடக்கம் கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டுள்ள மேற்படி பாடசாலை இவ்வருடம் பாடவிதான செயற்பாடுகள் மட்டுமன்றி இணைப்பாட விதானச்செயற்பாடுகளிலும் துரித வளர்ச்சியடைந்து வருகின்றது.

அதனடிப்படையில் கடந்த 2013ம் ஆண்டு க.பொ.த (சா/த)ன் சிறந்த பெறுபேறாக 8A,1C சித்தி பெறப்பட்டுள்ளதுடன் இணைப்பாட விதானச் செயற்பாடுகளான குச்சவெளி கோட்ட மட்ட தமிழ் தினப் போட்டியில் 11 முதலாம் இடங்கள் உட்பட மொத்தமாக 14 இடங்கள் கிடைக்கப்பெற்றுள்ளது. 26.04.2014 அன்று இடம்பெற்ற குச்சவெளி கோட்ட மட்ட ஆங்கில தின வாய்மொழிப் போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்கள் மூன்று 1ம் இடம், நான்கு 2ம் இடம் உட்பட மொத்தமாக 13 இடங்களைப் பெற்றுள்ளனர்.

# "வடக்கில் உள்ள த.தே.கூ வினர் இளைஞர்களைத் தவறாக வழிநடத்துகின்றனர்" – முரளீதரன்

வடக்கில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இளைஞர்களை தவறாக வழிநடத்துகின்றனர். அவர்களைத் தூண்டி விட்டு கொலைக்களத்திற்கு இழுத்துச் செல்கின்றனர் என மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் முரளீதரன் தெரிவித்துள்ளார்.

கிழக்கிலும் மக்களை முட்டாள்களாக்கி தமது இருப்புக்களைத் தக்கவைப்பதிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட்டு வருகின்றனர்.இவர்கள் உருப்படியாக எதனையும் செய்வதில்லை என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# கிழக்கு இளைஞர் யுவதிகளின் உரிமைகளை அரசாங்கம் மீட்டெடுத்துள்ளது

வடக்கு, கிழக்கு இளைஞர், யுவதிகளின் உரிமைகளை அரசாங்கம் மீட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்றுவரும் சர்வதேச இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்டிருக்கும் இளைஞர்கள் ட்விட்டர் மூலம் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தபோதே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

இன்று முற்பகல் 11.30 முதல் சுமார் 45 நிமிட நேரம் அந்த பதில்கள் ஜனாதிபதியின் ட்விட்டர் தளத்தின் ஊடாக வழங்கப்பட்டது.

இலங்கையில் நிலவிய பயங்கரவாதம், வடக்கு கிழக்கு இளைஞர், யுவதிகளின் உரிமைகள் அனைத்தையும் பறித்துவிட்டதாகவும் தமது அரசாங்கம் அந்த உரிமைகளை மீட்டெடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ இதன்போது கூறியுள்ளார்.

ட்விட்டரில் எழுப்பப்பட்ட மற்றுமொரு கேள்விக்கு பதிலளித்துள்ள ஜனாதிபதி, மத விவகாரங்களை அடிப்படையாகக் கொண்ட முரண்பாடுகள் இலங்கையில் இடம்பெறவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

சிறியளவிலான சம்பவங்கள் மாத்திரமே பதிவாகியுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 2013ஆம் ஆண்டில் இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் வடக்கிலிருந்து சிறந்த பெறுபேறுகள் கிடைத்துள்ளதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இது வடபகுதியில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு கிடைத்த சிறந்த பெறுபேறு எனவும் ஜனாதிபதி அவர்கள் கூறியுள்ளார்.

# உரிமை கோரப்படாத சடலம் அரச செலவில் அடக்கம்

கடந்த 19.04.2014 அன்று 4ம் கட்டை ஸ்ரீ வயிரா இராமையா பண்சாலையில் 76 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் மரணமடைந்துள்ளதாகவும் அவரைப்பற்றிய தகவல்கள் ஏதும் இதுவரையில் கிடைக்கப் பெறாததால் அரச உத்தரவிற்கிணங்க அரச செலவில் 07.05.2014 அன்று பிரேதப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. இவர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்.

வேலைவாய்ப்பு
Infinity Center For Higher Studies

பின்வரும் பாடங்களைக் கற்பிக்கக் கூடிய நபர்கள் தேவை.
- MS Office
- Graphic Designing
- Spoken English
- Accounting Packages

சமூக சேவையார்வம் கொண்ட அலுவலக நிர்வாகம் தெரிந்தவராக இருத்தல் நல்லது.
Walkin Interview on 17 May 2014
1630,Main Road,Periyakulam,6th Mile Post,
Nilaveli,Trincomalee.
மேலதிக தொடர்புகளுக்கு
infinityinstitute@ymail.com
+94112051218,0776267281

# திறன் விருத்திச் செயலமர்வு

திருகோணமலை மாவட்ட செயலகத் திறன் அபிவிருத்திப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட கணினி மயப்படுத்தப்பட்ட அரசக் கணக்கு முறைமை தொடர்பான செயலமர்வு கடந்த திங்கட்கிழமை மாவட்டசெயலக திறன் அபிவிருத்தி பிரிவு விரிவுரை மண்டபத்தில் ஆரம்பமானது.

திருகோணமலை மாவட்ட மேலதிக செயலாளர் எஸ்.அருள்ராசா தலைமையில், இப்பயிற்சிநெறி மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் மாவட்டச் செயலக மற்றும் பிரதேசச் செயலகங்களின் கணக்கு கிளைகளில் பணியாற்றும் 23 பேர் கலந்துகொண்டனர்.

வளவாளர்களாக திருகோணமலை மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எம்.கலைஞானசுந்தரம், வளவாளர் கே.பிரதீபன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# திருமலையின் ஐக்கிய தேசியக் கட்சி அலுவலர்கள் தெரிவு

திருகோணமலை தொகுதிக்கான ஐ.தே.கட்சி உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான நிகழ்வொன்று நேற்று (03) சனிக்கிழமை கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் திருகோணமலைத் தொகுதி ஐ.தே.கட்சி அமைப்பாளருமான இம்ரான் மஹ்ரூப் தலைமையில் பொது மக்கள் இணைப்புக் காரியாலயத்தில் நடைபெற்றது.

இதன் போது பின்வருவோர் தொகுதிக்கான உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டனர். ஊடகச் செயலாளராக- ஏ.எம்.வீ.அரபாத், கட்சி பிரச்சாரச் செயலாளராக ஏ.முகம்மது ரமீஸ், தொழிற்ச் சங்கச் செயலாளராக எம்.வீ.அப்துல்லா, கட்சி அங்கத்தவர் ஊக்குவிக்கும் செயலாளராக ஏ.எஸ்.ஜானியப் பிள்ளை, மாதர் விவகாரச் செயலாளராகத் திருமதி டபிள்யூ.பி.சில்வியா, இளைஞர் விவகாரச் செயலாளராக ஏ.ஆர்.எம்.பௌசி சுயேட்சை அமைப்புகளின் இணைப்புச் செயலாளராக எம்.எம்.பௌசி, பௌத்த மத விவகாரச் செயலாளராக பீ.எச்.டெனிய இந்து மத விவகாரச் செயலாளராக எஸ்.கே.சுகாந்தினி, முஸ்லிம் மத விவகாரச் செயலாளராக எம்.ஐ.எப்.நஜிமுதீன், வாக்கெடுப்பு நிலையச் செயலாளராக ஏ.எஸ். பிர்தௌஸ், இளைஞர் அமைப்புகளின் செயலாளராக கே.எம்.ஜனா, அத்தியாவசிய சேவைகள் செயலாளராக எஸ்.சனூஸ், தேர்தல் தொகுதி முகாமையாளராக ஏ.எஸ்.எம்.சுல்தான. ஆகியோர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் திருகோணமலை தொகுதி ஐ.தே.கட்சி அமைப்பாளருமான இம்ரான் மஹ்ரூப் கலந்து கொண்டு இந் நியமனங்களை வழங்கி வைத்தார்.

அநீதிகளை, தவறுகளை, மோசடிகளை, பொறுக்கமுடியவில்லையா?.....

நீங்கள் நேரடியாகக் கேட்க முடியாததை மலைமுரசின் ஊடாகக் கேளுங்கள்.....!

இரகசியம் காக்கப்படும்
075 4252042

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைநகரை உலுக்கிய தலைக்கவசக் கொள்ளையர்கள்

வாராந்த அலசல்

செய்திகள் பார்வைகள் எண்ணங்கள்



தலைக்கவசக் கொள்ளையர்களின் கைது

இலங்கையின் தலைநகரத்தை உலுக்கிய தலைக்கவசக் கொள்ளைகள் சற்று ஓய்ந்திருக்கின்றது. அக் கொள்ளையில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தில் நால்வர் கைதானதை தொடர்ந்தே இத் தற்காலிக ஓய்வு நிலவுகின்றது.

சுமார் இருபது வியாபாரத்தாபனங்களில் நடாத்தப்பட்ட தலைக்கவசக் கொள்ளைகளில் பல மில்லியன் ரூபா பணம் நகைகள் போன்றன களவாடப்பட்டன. வங்கிகள், நிதி நிறுவனங்கள், பூட்சிட்டி, சத்தோச, அபான்ஸ் காட்சியறை போன்ற இன்னோரன்ன நிறுவனங்களில் நடைபெற்ற கொள்ளைகளால் பாதுகாப்புத் தரப்பு அதிர்ந்து போய் இருந்தது. ஏனெனில் கொள்ளையர்கள் எந்தவொரு கொள்ளையிலும் தடயங்கள் எவற்றையும் விட்டுப் போகவில்லை. கிடைத்த தடயம் ஒன்றே ஒன்று தான் - தலைக்கவசத்தின் நிறமும் அதன் வடிவமும்-.

அந்தத் தடயத்தை மட்டும் வைத்துக் கொண்டு கொள்ளையர்களைக் கண்டு கொள்வது கையாலாகாத காரியமாகவே இருந்தது. முதலாவது தலைக்கவசக் கொள்ளையின் பின்னர் கொள்ளையர்கள் சில நாட்களை அவதானிப்புக் காலமாக விட்டிருந்தனர். அவ் அவதானிப்புக் காலத்தில் காவல்துறை யாதாயினும் தடயங்களை கண்டுகொள்கிறதா? என அவர்கள் அவதானித்தனர். அதன்போது தடயங்கள் எவையும் மாட்டுப்படாமலிருப்பதை கண்ட அவர்களின் கரங்கள் அடுத்தடுத்து பல கொள்ளைகளை அதே பாணியில் நிகழ்த்தியது.

கொள்ளைகளின் அளவு கடந்து போகவே விசாரணைகளையும், விசாரணைக் குழுக்களையும் அதிகரித்தது காவல்துறை. அதிலொரு விசாரணைக்குழு தடயங்களின்றி அல்லது தடயங்கள் மிகக் குறைவாக விட்டுச் செல்லும் வகையான கொள்ளையர்களின் பட்டியலை ஆராய்ந்தது.

அப்பட்டியலிலுள்ள கொள்ளையர்களின் முகவரிகளையும் அவர்கள் இப்போதுள்ள நிலையையும் ஆராய்ந்த போது ஒரேயொரு போதைப்பொருளுக்கு அடிமையான கொள்ளைக்காரக் குற்றவாளியான ஜெகத் லசந்தவைப் பற்றி மட்டும் தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை. ஜெகத் லசந்த தற்போதும் பிணையிலேயே இருப்பதும் கடந்த 6 மாதங்களாக அவர் மறைந்திருப்பதும் தெரியவந்தது.

எனவே ஜெகத் இப்போது எங்கேயுள்ளான் எனத் தேடும் பணிகள் முடுக்கி விடப்பட்டன. புலனாய்வுக் காவல் துறையினர் இரகசியமாக ஹெரோயின்



வினியோகிப்பவர்களின் வலைப்பின்னலுக்குள் புகுந்தனர். அவ் வலைப்பின்னலில் நுகேகொடையில் உள்ள கராஜ் ஒன்றின் உரிமையாளர் ஊடாகவே ஜெகத் போதைப்பொருளைப் பெற்றுக்கொள்வது தெரியவந்தது.

அந்த கராஜ் உரிமையாளரின் தொலைபேசிப் பட்டியலைப் பரீட்சித்த போது மெனிக்கின்னவில் வசிக்கும் ஒருவருடன் அந்த உரிமையாளர் தொடர்புகளை நாளாந்தம் பேணுவது தெரியவந்தது. அந்த மெனிக்கின்னவாசியோர் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் (சி.பாஉ).

அடுத்து ஓர் காதல் நாடகம் அங்கு அரங்கேறியது. அந்த சிவில் பாதுகாப்பு அலுவலருக்கு ஒரு நாள் தவறான அழைப்பொன்றை பெண்ணொருவர் ஏற்படுத்தினார். அடுத்த இரண்டு நாட்களுக்குள் அந்தப் பெண்ணுக்கும் சி.பா.உ விற்கும் இடையே தொடர்பு பலப்பட்டது. அதையடுத்து அந்தப் பெண் கண்டிக்கு தலதா மாளிகையைச் சுற்றிப்பார்க்க வருவதாகவும் தன்னுடன் அன்றைய நாளைக் கழிக்க முடியுமா? என்றும் கேட்ட போது அந்த சி.பா.உ மிக்க மகிழ்வுடன் அவ்வுதவியைச் செய்வதாக உறுதியளித்தார்.

சிலநாட்களில் கண்டி பேரூந்துத் தரிப்பிடத்தில் அழகான பெண் ஒருத்தி வந்திறங்கினாள். அவள் கைத்தொலைபேசியை உயிர்ப்பித்து தன்னை அடையாளப்படுத்திய அடுத்த கணம் விலையுயர்ந்த புதிய மோட்டார் சைக்கிளில் அந்த சி.பா.உ அவளை அண்மித்தார். அவர் அண்மித்த போதுதான் ஆச்சரியமான விடயமொன்றை அவர்கள் அவதானித்தனர். அவர்கள்...? ஆம்... சாதாரண உடைகளில் காவல்துறையினர் அவ்விடத்தில் இருந்தனர்....

அவர் அணிந்திருந்த தலைக்கவசமும் உதிரியாக கையில் வைத்திருந்த தலைக்கவசமும் கொள்ளைகளுக்குப் பயன்பட்ட தலைக்கவசங்களை ஒத்திருந்தன.

அப்போது தான் சாதாரண உடையில் இருந்த அப்பெண் புலனாய்வாளர் உட்பட அவர்களைச் சுற்றிச் சாதாரணமான உடையில் இருந்த அனைத்துக் காவல்துறையினருக்கும் தாம் யாரைச் சென்றடைந்துள்ளோம் என்பது தெரிந்தது.

அதையடுத்து கைதான அந்த சி.பா.உ வின் நெருங்கிய உறவினராக ஜெகத் இருப்பதும் அவரது வீட்டிலேயே அவன் வசிப்பதும் தெரிய வந்தது. உடனடியாகவே சி.பா.உ ன் வீட்டிற்கு தொலைபேசி அழைப்பை சி.பா.உ ஊடாக மேற்கொண்ட காவல்துறையினர் அங்கு ஜெகத் உள்ளாரா எனக் கேட்ட போது அவர் தற்போது அங்கு இல்லை என தெரியவந்துள்ளது.

தொடர்ந்து உடனடியாகவே சி.பா.உ வின் வீடு சுற்றிவளைக்கப்பட்டது. அங்கு நிறுத்தப்பட்டிருந்த புதிய முச்சக்கர வண்டிக்குள் இருவர் அசைய முடியாதளவு போதைப்பொருள் மயக்கத்தில் இருந்தனர். அவர்கள் முறையே ஜெகத் மற்றும் சஞ்சீவ எனும் மற்றோர் குற்றவாளி.

சி.பா.உ வின் வீட்டில் இருந்து உடலங்கி (ஜக்கட்) உள்ளூர் சுழல் துப்பாக்கி, புத்தாக்கப்பட்ட மற்றோர் துப்பாக்கி, லப்டொப், ஐந்து மோட்டார் சைக்கிள்கள் முச்சக்கர வண்டி உட்பட பழைய கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. பொய்முடி, உருமறைப்புச் செய்யும் பச்சை குத்துப் படங்கள் போன்றவையும் கைப்பற்றப்பட்ட போதே அவர்கள் கொள்ளையில் ஈடுபடும் போது தலைக்கவசம் கழன்றாலும் தம்மை அடையாளம் காண முடியாதபடியே அவர்கள் தயாராகி வந்திருப்பதும் தெரிய வந்தது.

எஞ்சிக் கிடக்கும் கேள்வி ஒன்று தான்...... இவர்கள் மட்டுமா இந்தக் கொள்ளையில் ஈடுபட்டார்கள்?... அறிவுடனும், சிறந்த திட்டமிடலுடனும் மிகத் துணிவாகவும் மேற்கொள்ளப்பட்ட இக் கொள்ளையில் ஈடுபட்டவர்கள், தம்மைக் கைது செய்ய ஆதாரமாக இருப்பது தலைக்கவசம் எனத் தெரிந்திருந்தும் அதனை அசண்டையீனமாக எடுத்துவரும் பேதமை கொண்டவராயின் எவ்வாறு இக் கொள்ளைகளை திட்டமிட்டு நிகழ்த்தியிருக்க முடியும்?... உங்களுக்கும் இக் கேள்வி எழுகின்றதா?

# இன்று அவர்கள் காவல்துறையினரிடம் வந்துவிட்டார்கள்....

ஒரு காலத்தில் அந்த நிறம் தமிழர்களிடையே மரண அர்த்தத்தை உருவாக்கியிருந்தது. அந்த நிறம் பச்சையல்ல. ஆனால் சர்வதேச அளவில் சமாதானத்திற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறமான வெள்ளை....

அந்த நிறத்தில் இலக்கத்தகடற்ற வான் தமிழர்களின் வீட்டுவாசலில் நிற்குமானால் அங்கு மரணத்தின் சாயல் படிவதை எந்தக் கொம்பனாலும் தவிர்த்துவிட முடியாதிருந்தது.

மரணதேவன் எருமை வாகனத்தில் வருவான் எனக் கற்றிருந்த தமிழர்களுக்கு நவீன யமனின் வாகனமாக வெள்ளை வான் உருக்கொண்டிருந்தது.

ஆனால் இன்றோ அந்த வெள்ளை நிற மரண தேவனின் பிடியில் காவல்துறை மாட்டியிருப்பது பெரும் முரண்பண்பை உருவாக்கியுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன் போதைப்பொருள் கடத்தலை விசாரணை செய்து குற்றவாளிகளைக் கண்டு பிடித்த காவல்துறை அலுவலர் ஒருவர் அவரது மனைவியுடன் சேர்த்து வெட்டிக் கொல்லப்பட்டார்.

அதனையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை குருநாகல் பிரதேசத்தில் அதிகாலையில் காவல் கடமையில் இருந்த இருண்டு போக்குவரத்துக் காவல்துறையினர் கடத்தப்பட்டுள்ளனர். அவர்கள் நிராயுதபாணியாக இருந்தமையால் எதிர்ப்புக்கள் எதுவுமின்றி இக் கடத்தல் நிகழ்ந்துள்ளது.

கடத்தியவர்கள் வெள்ளைவானில் வந்திருக்கின்றனர். தன்னியக்க ஆயுதங்களைத் தம்மகத்தே வைத்திருந்துள்ளனர்.

கடத்திய இரண்டு காவல்துறையினரையும் அம்மணமாக்கி காட்டுப்பகுதியொன்றில் வைத்துச் சுடமுயன்றபோது ஒருவர் தலத்திலேயே சாவடைய மற்றையவர் ஒருவாறு தப்பியோடியுள்ளார்.

தப்பியோடியவர் தற்போது வைத்தியசாலையில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளார். ஆனால் அவரிடமிருந்து தற்போதுவரை எவ்வித தகவல்களும் வெளியானதாகத் தெரியவில்லை.

இச்சம்பவத்தை அடுத்து அருகிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றும் ஆயுததாரிகளால் கொள்ளையிடப்பட்டுள்ளது. அவர்களும் வெள்ளை வானில் வந்திருந்தனர் எனத் தெரிகின்றது.

நால்வர் ஆயுதங்களுடன் இருந்த போது இரண்டு ஆயதம் தரிக்காதவர்களைச் சுட்டுக் கொல்வது என்பது ஒன்றும் மிகக் கடினமான விடயம் அல்ல. ஆகவே ஒருவர் கொல்லப்பட வேண்டும் என்பதும் மற்றையவர் தப்பிக்க விடப்பட்வேண்டும் என்பதும் முன்னரே திட்டமிடப்பட்டதோ? என்று எண்ணத் தோன்றுகின்றது.



இராணுவத்திலிருந்து தப்பியவர்கள்... போதைப்பொருள் கடத்தல்காரர்கள்... அரசியல் பக்கபலத்தைக் கொண்ட மாபியாக் கும்பல்கள்.... இரக்சியமாக இயங்கும் அரச ஆதரவு ஆயதக் கும்பல்கள்..... புனர்வாழ்வளிக்கப்பட்டாலும் குற்றஞ் செய்வதைத் தொழிலாகக் கொண்ட போராளிகள்.... அவர்கள் அனைவருக்கும் கிடைக்கும் ஆயுதங்கள்...... அவர்கள் இப்போது காவல்துறையிடம் வந்துவிட்டார்கள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாராண்மைவாத உலக ஒழுங்கும் தமிழரின் "வழி" காட்டிகளும்

ஐநா மனிதவுரிமைச்சபையில் சிறிலங்கா மீதானதீர்மானம் நிறைவேற்றப்பட்டமை சிறிலங்காவின் மக்களுக்கு கிடைத்த வெற்றி என பிரதமர் டேவிட்கம்ரன் தெரிவித்துள்ளார். இத்தீர்மானம் சிறிலங்காவிற்கு எதிரானது அல்ல, இது சிறிலங்காவிற்க்கானது எனக் கூறியுள்ளார் சிறிலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் மிஷேல் சிஷன்.

இவர்களைப்போலவே இத்தீர்மானம் உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கத்திற்காகப் போராடும் சிறிலங்காவின் மக்களுக்கு கிடைத்த வெற்றி என கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் குறிப்பிட்டதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சம்பந்தன், காலனித்துவ விசுவாசத்துடன் மேற்குலக அதிகார மையங்களின் கருத்தை பிரதிபலிக்கிறார் என எடுத்துக்கொள்ளலாம். ஆனால், இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் தவிர்ந்த மற்றயவர்கள் இத்தீர்மானத்திற்கு வலுவான எதிர்ப்பினை தெரிவித்துவருகையில், இது சிறிலங்கா மக்களுக்கானது எனமேற்குலக இராசதந்திரிகள் ஏன் கூறுகிறார்கள் என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது.

இம்முறை மனிதவுரிமைச்சபையின் கூட்டத்தொடரின் போது, உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் ஜெனிவாவிற்கு வந்து, ஐநா பணியகமான Palais des Nations வளாகத்தில் lobby நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களை எங்களின் வழிகாட்டிகள்' என மூத்த ஊடகவியலாளர் மதிப்பிற்குரிய ஏ.சி. தாசீசியஸ் அவர்கள் உயிரோடை தமிழ் வானொலி நிகழ்ச்சி ஒன்றில் அழைத்ததை கேட்கக் கூடியதாக இருந்தது.

வழிகாட்டிகள்' என்பவர்கள் சரியான வழியினைக் காட்டுபவர்களாக இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பிருப்பதால், மேற்படி செயற்பாட்டாளர்களை பொதுவில் 'வழிகாட்டிகள்' என அழைப்பதில் எனக்குத் தயக்கமிருக்கிறது.

இருப்பினும் அவர்களது வகிபாகத்தைகருதியே தாசீசியஸ் ஐயா அவ்வாறு அழைகிறார் எனநம்புகிறேன். தவிரவும், தமிழில் நல்ல பல புதியசொற்களை அறிமுகப்படுத்தியிருக்கும் அவரது தமிழோடு விளையாடுவது எனது நோக்கமல்ல.

ஐநா மனிதவுரிமைச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஈழத்தமிழ் மக்களின் அரசியல்உரிமைகளைப்பற்றிப் பேசவில்லை, அவர்களைத்தேசிய இனமாக மட்டுமல்ல, ஒரு தரப்பாகவே குறிப்பிடவில்லை. ஆனால் எல்லாப் போதாமைகளுக்கு மத்தியிலும் இத்தீர்மானம் உலகின் இரண்டு பலம்பொருந்திய நாடுகளினால், ஒட்டுமொத்த மேற்குலகத்தின் ஆதரவுடன் கொண்டுவரப்பட்டது என்ற விடயத்தினை நாம் குறைத்து மதிப்பிட முடியாது.

வேறு எந்த நாடுகளினதும் ஆதரவில்லாத நிலையில், இவ்வல்லாதிக்க அலையடிப்புக்கு எதிராக ஈழத்தமிழினம் எதிர்நீச்சல் போடமுடியாது. இருப்பினும், இப்பெருநதியில் அடித்துச் செல்லப்பட்டு கரைந்துவிடபோகிறோமா ? அல்லது நதியோட்டத்துடன் ஓடினாலும் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை கவனத்தில் நிறுத்திச் செயற்படப்போகிறோமா? என்ற விடயத்தில் தமிழர் தரப்பு அவதானத்துடன் செயற்படுவது அவசியமாகிறது.

தீர்மானத்தைக் கொண்டுவந்த அரசுகளும் அதனை ஆதரித்து நின்ற அரசுகளும் ஈழத்தமிழரின் நலனில் அவர்களுக்கு உள்ள பிரத்தியேக அக்கறை காரணமாக எந்த முன்னெடுப்பினையும் செய்யவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

மற்றைய தேசிய இனங்களின் அல்லது நாடுகளின் விடயங்களில் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கும் இது பொருந்தும். அவ்வாறாயின் மேற்குலகம் எதனைச் சாதிக்க விழைகிறது?

இவ்வினாவிற்கு பதிலளிக்க முற்படும் சிலர், இது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை துறைமுகத்தை படைத்துறைத் தேவைகளுக்காக கையகப்படுத்தும் அமெரிக்காவின் முயற்சிக்கான அடிக்கோள் என்கிறார்கள்.

சிலர், எரிபொருட்களை கொண்டும் செல்லும் கப்பற் பாதையில் உள்ள இலங்கைத் தீவின் அமைவிடத்தின் மூலோபாய முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். இன்னமும் சிலர் பிராந்தியத்தில் சீன ஆதிக்கம், முத்துமாலைத் திட்டம் பற்றியெல்லாம் பேசுகிறார்கள. இவர்களின் கருத்துகளில் சிறிதளவேனும் உண்மைத்தன்மை இல்லை என நிராகரித்து விடமுடியாது.

இருப்பினும் மேற்குலகத்தின், கடந்தகால, தற்கால நடவடிக்கைகளை அவதானிக்குமிடத்து, இலங்கைத் தீவின் மீதான மேற்கின் கவனத்தை,தாராண்மைவாத உலக ஒழுங்கினை(liberal world order) ஏற்படுத்தும் அதன் செயற்பாடுகளின் ஒருபகுதியாகவே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 2002ம் ஆண்டிலிருந்து இன்றுவரையான காலப்பகுதியில் இலங்கைத்தீவு மீதானமேற்குலகத்தின் நடவடிக்கைளை இந்த அடிப்படையில் அவதானிக்க முடியும்.

தாரண்மைவாத சர்வதேசியம் (liberal internationalism) என்பது நாடுகளை, மனிதவுரிமை,ஜனநாயகத்தைப் பேணுதல், நல்லாட்சி போன்றவிடயங்களில் தாராண்மைவாத ஒழுங்குக்குள் கொண்டுவருவது என்றும் அதற்காக இறைமைகொண்ட நாடுகளில் தலையீடுகளை மேற்கொள்ளலாம் என்றும் மேற்குலகின் வெளியுறவுக்கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான தலையீடுகளை மேற்கொள்ளுவதற்கு ஐநா சபை, ஐரோப்பிய மனிதவுரிமை நீதிமன்றம் போன்ற பன்னாட்டு மாற்றங்களை மேற்கு நாடுகள் நன்கு பயன்படுத்தி வருகின்றன.

நாடுகளுக்கிடையிலான கணிப்பின்படி, மனிதவுரிமைகள், சனநாயகத்தைப் பேணுதல் போன்றவிடயங்களில் சிறிலங்கா 89வது இடத்திலிருக்கிறது. ஐநா மனிதவுரிமைச்சபையில் சிறிலங்காவிற்கு ஆதரவாக வாக்களித்த நாடுகள் அனைத்தும் அதற்கு கீழிருக்கின்றன.

சிறிலங்காவிற்கு ஆதரவு வழங்கிய அமெரிக்கசார்பு நாடுகளான ஐக்கிய அரபுகள் அமீரகம் (UAE), சவுதி அரேபியா என்பனமுறையே 149வது, 163வது இருப்பதாக பட்டியலிடப்பட்டுள்ளது. இத்தகவல்களிலிருந்து தாராண்மைவாத உலக ஒழுங்கு பற்றி இந் நாடுகள் கொண்டுள்ள அச்சத்தை புரிந்து கொள்ளமுடிகிறது.

இப்போது 'வழி' காட்டிகள் விடயத்திற்கு வருவோம். சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராக ஒரு தீர்மானத்தை ஐநா மனிதவுரிமைச்சபையில் நிறைவேற்றும் விடயத்தில் இங்கு நாம் குறிப்பிடும் வழிகாட்டிகள் அனைவரும் உடன்படுகிறார்கள்.

சர்வதேசத் தலையீடு விடயத்திலும், அனைத்துலக விசாரணைப் பொறிமுறை ஒன்று அமைக்கப்படவேண்டும் என்ற விடயத்திலும் இவர்களுக்கிடையில் ஒருமித்த கருத்து நிலவுகிறது.

இருப்பினும், இவ்வாறான சர்வதேச நகர்வுகளினூடாக தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளுவதற்கு இவை கடைபிடிக்க முனையும் அணுகுமுறையில்தான் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும், அதன் ஆதரவு அமைப்புகளான அருட்தந்தை இமானுவலின் உலகத்தமிழர் பேரவை, கனேடியதமிழ் கொங்கிரஸ், அவுஸ்திரேலிய தமிழ் கொங்கிரஸ் போன்ற புலம்பெயர்தமிழ் அமைப்புகளும் முற்று முழுதாக மேற்கின் தாராண்மைவாத நகர்வுகளுக்கு உதவுபவர்களாகவும் தமிழ்த்தேசிய இனத்தின் அரசியல் உரிமைகளை இவர்கள் இரண்டாம்பட்சமாக எடுத்துக்கொள்வதாகவும் தெரிகிறது.

ஆகையால் அமெரிக்கத் தீர்மானம் முழு சிறிலங்கர்களுக்கும் கிடைத்த வெற்றி என தமிழ்த் தேசியவாதக் கட்சியினால் கூறமுடிகிறது.

தமிழ்த் தேசியவாத அடையாளங்களைத் துறந்து 'சிறிலங்கர்களாக' தங்களை நிலைநிறுத்த கூட்டமைப்பின் தலைமை அண்மைக்காலமாகப் படாதபாடுபடுகிறது. இதனைச் சிலர் 'புலிநீக்க அரசியல்' எனக் கூறினாலும், தேர்தல்காலத்தில் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்கு புலிநீக்க அரசியலே கூட்டமைப்புக்கு தேவைப்படுகிறது என்ற முரண்நிலையயையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்த இரட்டை நிலைப்பாட்டை கூட்டமைப்பு கனகச்சிதமாகப் பேணிவருகிறது. சர்வதேச தொடர்பாடல்களுக்கு நியமன உறுப்பினர் சுமந்திரனும், தமிழ் மக்களின் gallery இல் நடித்துக்காட்டி, உசுப்பேத்துதற்கு சிறிதரன், சிவாஜிலிங்கம்,அரியநேந்திரன் போன்றவர்களும் (சென்னைத்தமிழில் கூறுவதானால் டம்மி பீசுகளும்) கூட்டமைப்புக்கு தேவைப்படுகிறது.

கூட்டமைப்பைச் சேர்ந்த 'வழிகாட்டிகள்' திசைதெரியாத நிலையில் ஜெனிவாவில் கூடாரமடித்திருந்தாலும், நாடுகள் மட்டத்திலான அதிகாரிகளுடனான தொடர்பாடல்களை சுமந்திரனும், அவரது உதவியாளரான நிரன் அங்கிற்றல் என்பவருமே மேற்கொண்டிருந்தனர்.

சுமந்திரனின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக நாடுகளின் பிரநிதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்த அனந்தி சசிதரன் எடுத்த முயற்சிகளுக்கு சுமந்திரனும் அவரது ஆதரவாளர்களும் முட்டுக்கட்டை போட்டதாக அறியமுடிகிறது.

அனந்தியை புலி ஆதரவாளர்' என ஒதுக்கி வைக்கும் விடயத்தில், உலகத் தமிழர் பேரவையில் அங்கம் வகிக்கும் அமைப்புகளும் முன்னின்றதாகவும், கனேடிய தமிழ் கொங்கிரசின் பிரதிநிதி ஒருவர் அனந்தியை ஒரு `loose cannon' எனவும் அவரது மொழிபெயர்ப்பாளரை ஈ.பி.டி.பி ஆதரவாளர் எனவும் வெளிநாட்டு தன்னார்வச் செயற்பாட்டாளர்களுக்கு கூறியதாக அத்தரப்பிலிருந்து தெரியவருகிறது.

தாராண்மைவாத நடைமுறைகளை மீறாமல், அதேசமயம் தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளில் விட்டுக்கொடுக்காமல், நாடுகளின் பிரதிநிதிகள் மட்டத்தில் செயற்படக்கூடிய இளைய தலைமுறைச் செயற்பாட்டாளர்கள் பலர் இப்போது முன்னணிக்கு வந்துள்ளமை சற்று ஆறுதலளிக்கிறது.

இத்தகைய தகமைகளைக் கொண்டவராகவும், தமிழ் மக்களின் போராட்டத்தினை அடுத்தகட்டத்திற்கு கொண்டுச்செல்லக்கூடிய ஒரு தலைவராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாரை இனங்காட்டுவதில் எனக்கு எவ்வித தயக்கமும் இல்லை. எந்தவொரு வெளிச்சக்திகளுக்காகவும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை விட்டுக்கொடுக்காத ஒருவராக அவர் இருப்பதனால் அதிகார மையங்கள் மட்டத்தில் அவர் விருப்புக்குரியவராக இருப்பார் என எதிர்பார்க்க முடியாது.

இருப்பினும் அவர்களால் புறக்கணிக்க முடியாத ஒரு ஸ்தானத்தை அவருக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்கான பலத்தினை தாயக புலம்பெயர் தமிழ் மக்களே வழங்கவேண்டும்.

**நன்றி - ஒருபேப்பர்.கொம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ தகுதி உள்ளவர் தானா??

**...நாட்டு நடப்பு...**

இன்று நாடு பூராகவும் குற்றச் செயல்கள் அதிகரித்து காணப்படுகின்றன. அதிலும் பாலியல் தொடர்பான குற்றச் செயல்கள் முக்கிய இடத்தை வகிக்கின்ற வேளையில் பாடசாலை செல்லும் தம் பிள்ளைகள் தொடர்பாக விசேட பாதுகாப்பையும், கவனத்தையும் செலுத்த வேண்டிய நிலைக்கு இன்று பெற்றோர் தள்ளப்பட்டுள்ளனர்.

அண்மையில் பிரத்தியேக வகுப்புக்குச் சென்று வந்த ஆண்டு நான்கில் கல்வி பயிலும் சிறிய மாணவி ஒருவர் அறுபது வயதுடைய நபரொருவரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளாள். முச்சக்கர சாரதி தனது வாகனத்தில் வழமையாக பயணிக்கும் வயது வந்த மாணவியொருவருக்கு தனது கையடக்க தொலைபேசி மூலம் பாலியல் தொடர்பான படங்களைக் காண்பித்து தகாத உறவை புரிய முயற்சித்ததன் விளைவாக பதினான்கு நாட்கள் அவர் விளக்க மறியலில் இருந்துள்ளார்.

சுமார் 13 வருடங்கள் பாலியல் குற்றச் செயலுக்காக சிறைவாசம் அனுபவித்து வீடு திரும்பியவர், அன்றைய தினமே தனது சொந்த மகளை வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார். அவ்விதமான குற்றச் செயல்களை அடுக்கிக் கொண்டே போகலாம். சட்டத்தின் பிடிக்குள் அகப்பட்டவர்களை விட அகப்படாத தொகைக்கு எண்ணிக்கையே இல்லை. நாட்டின் பல பாகங்களில் இடம்பெற்ற சம்பவங்களே அவை.

வயதுக் கோளாறு காரணமாக இளைஞர்கள், யுவதிகள் அவ்விதமான குற்றச்செயல்களில் ஈடுபடுகிறார்கள் என காரணம் கற்பித்தாலும், இன்று அனேகமான முதியோர்கள் பாலியல் வன்முறைகளில் துணிந்து செயல்பட்டு வருகிறார்கள். அவர்களின் நடத்தைகள் இளைஞர்களின் நடத்தைகளை விட மிக மோசமாக அமைந்துள்ளதைக் கவலையுடன் எடுத்துக் கூற வேண்டியுள்ளது.

முதியோர்களைப் பொறுத்த வரையில் நாளுக்கு நாள் அவர்களது வீரியம் குறைந்து கொண்டு போவதுதான் இயற்கையின் நியதி. ஆனால் அவர்கள் கட்டிளம் பருவத்தினரை விட கட்டுக்கடங்காதவர்களாக பாலியல் விடயங்களில் முண்டியடித்து முன் செல்வது விந்தையானதே.

அவர் அப்பகுதி நகராட்சி மன்றத்தின் ஓய்வு பெற்ற சிற்றூழியர். அவருக்கு எக்கச்சக்கமான பேரப்



பிள்ளைகள் உள்ளனர். அவர்கள் அனைவரும் திருமணமாகும் வயதைக் கொண்டவர்கள். அப்படிப்பட்ட ஒருவரிடம் எவரும் எதிர்பார்ப்பது நல்ல பக்குவ நிலையையே.

ஆனால் அவரின் போக்கு மிகவும் வித்தியாசமான தாகும். காலம் சென்ற முன்னாள் ஜே.ஆர். ஜெயவர்த்தனா அடிக்கடி கூட்டங்களில் இப்படி கூறி வருவார் 'நான் முதியவன் ஆனாலும் எனது இதயம் என்றும் இளமையானது' என்று அவர் அப்படி கூறுவதற்கு காரணம் தன்னால் இந்த நாட்டுக்கு இன்னமும் பணியாற்ற முடியும் என்ற கருத்திலே அன்றி, வேறு எந்தவொரு தீய எண்ணத்தையும் பிரதிபலிக்கச் செய்வதற்கான கூற்று அல்ல அது.

இன்று இருக்கும் சில முதியவர்கள் தங்களால் இன்னமும் இயலும் என்று மார்தட்டி கூறுவது பாலியலை அடிப்படையாக கொண்ட விடயங்களுக்கு மட்டுமே. பாலியல் விடயங்களைப் பற்றிப் பேசுவதில் சில முதியோர்களுக்கு படுகுஷி. மிகவும் பொறுப்புடனும் பக்குவமாகவும் நடந்து கொள்ள வேண்டிய இவர்கள் இளைஞர்கள் போன்று கதைக்கவும், நடந்து கொள்ளவும் முயற்சிக்கின்றனர். அவர்களின் வயதுக்கேற்ற ஆசைகளாக இருக்க வேண்டியவை வரம்பு மீறிச் செல்வதாலேயே பல கவலைக்கிடமான அசம்பாவிதங்கள் நாடளாவிய ரீதியில் நிகழ்வதற்குக் காரணமாகவுள்ளன.

மேலும் அந்த ஓய்வு பெற்ற ஊழியரின் நடவடிக்கைகளும் வயது முதிர்ந்தவர்களுக்குரிய நடவடிக்கைகளாக அமைந்திருக்கவில்லை. அவ்வூரில் சனநடமாட்டமில்லாத ஒழுங்கையைத் தேர்ந்தெடுத்து தனது கையடக்க தொலைபேசி ஊடாக அவர் மணிக்கணக்கில் மிக இரகசியமாக உரையாடுவார். குறித்த நபர் தனது வீட்டிலிருந்து அவ்விதம் உரையாடாமல் ஒழுங்கைக்குள் சென்று நேரத்தைக் கூட பொருட்படுத்தாது மிக இரகசியமாக யாருடன் அவ்விதம் உரையாடுகிறாரோ தெரியவில்லை என பொதுமக்கள் சந்தேகத்துடன் பேசிவருவது வழமை.

அவரின் அந்த இரகசிய உரையாடலில் நிச்சயம் ஏதோ ஒரு மர்மம் இருக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அவர் முன்னர் ஒருதடவை அயல் கிராமத்திலுள்ள குடும்பப் பெண் ஒருவரோடு இரகசிய தொடர்பு வைத்திருந்ததை அறிந்த அப்பெண்ணின் கணவன் அவளை எச்சரிக்கவே அவள் தற்கொலை செய்து கொண்டாள். அது மாத்திரமல்ல இன்னும் பல குடும்பப் பெண்கள், இளம் யுவதிகள் ஆகியோரோடும் இவரின் இரகசிய தொடர்புகள் இருந்துள்ளதென ஊரார் அடிக்கடி பேசிக் கொள்வார்கள்.

அந்தக் காலத்தில் அவர் நேரடியாக குறித்த பெண்ணைத் தேடிப் போவார். தற்பொழுது அந்தப் பிரச்சினை அவருக்கில்லை. சகல சமாச்சாரங் களையும் அவரது கையடக்கத் தொலைபேசி ஊடாக பேசித் தீர்த்துக் கொள்வார். அவரைப் போன்றே அவரின் மகனின் நடத்தையும் கீழத்தரமானதாக அமைந்துள்ளது. அவனுக்கு முப்பத்தைந்து வயதாகியும் இன்னமும் அவன் திருமணம் செய்யவில்லை. ஆனால் அவன் சற்று வித்தியாசமான நடத்தையைக் கொண்டவன். மேலும் அவனது இரசணை வேறு.

தன்னை விட வயது கூடிய திருமணமான, பிள்ளைகள் உள்ள குடும்பப் பெண்களை அவன் விட்டு வைக்கமாட்டான். வீதியில் அப்படிப் பட்டவர்களைக் கண்டால் துரத்திச் சென்று அவர்களுடன் பேச்சில் ஈடுபடுவான். அது அவனுக்குரிய விசேட இரசணை.

மேலும் தகப்பனுக்கும், மகனுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். ஊரிலே வித்தியாசமான இரசணையை கொண்ட இவர்களை விமர்சிக்காதவர்கள் ஒருவருமே இல்லை. குடும்பச் சீர்கேடு என்பது குடும்பத் தலைவனில் இருந்து ஆரம்பித்து ஒட்டு மொத்தக் குடும்பத்தையே குட்டிச் சுவராக்கி விடுகிறது. அந்தத் தகப்பனுக்கும், மகனுக்கும் அங்கு புத்தி சொல்ல யாருமே இல்லை. காரணம் அந்த முழுக் குடும்ப உறுப்பினர்களில் அங்குள்ள பெண்கள், ஆண்கள் அனைவருமே அச்சீர்கேடான வாழ்க்கையை விரும்பி வாழ்பவர்கள்.

அந்த சீர்கேடான வாழ்க்கையானது அவர்களின் எதிர்காலச் சந்ததியைக் கூட பாதிக்கும் என்பதை அவர்கள் என்றுமே உணர்ந்ததில்லை. தாங்கள் அவ்விதம் நடந்து கொள்வதைப் பெருமையாக கணிப்பதாலேயே தங்கள் தவறைத் திருத்திக் கொள்ளத் தவறிவிடுகிறார்கள். வாழ்க்கையை பகட்டாகவும், பொழுது போக்காகவும், வினோதமாகவும் வாழ்வதையையே ஒட்டு மொத்த குடும்பமும் விரும்புகின்றது.

அந்தக் குடும்பத் தலைவனின் பொறுப்பற்ற போக்கு அக்குடும்பத்தில் பாரிய சிக்கல்களைத் தோற்று வித்திருந்தன. ஆனால் அவர் அதைப்பற்றி என்றுமே வருத்தப்படுவதில்லை. அங்குள்ள சமூகம் ஏற்றுக் கொள்ளக்கூடிய குடும்பக் கட்டமைப்பு அந்த



குடும்பத்தில் அறவே இல்லை. ஒவ்வொருவரும் தமக்கு விருப்பமான முறையில் வாழக்கூடிய சூழல் அங்கு உருவாக்கப்பட்டிருந்தது. பெற்றோருக்கு பிள்ளைகள் பணிந்து நடக்க வேண்டுமென்ற அல்லது பிள்ளைகள் பெற்றோருக்கு மதிப்பளிக்க வேண்டுமென்ற நிலை இருக்கவில்லை.

மேலும் அவர் கூட முறையாக திருமணம் செய்யாததால் அவரின் பிள்ளைகள் கூட முறைப்படி முறையான திருமணங்களை செய்யவில்லை. ஓடிப்போய் ஓடி வந்தவர்கள் என ஊரார் அவரின் பிள்ளைகளைப் பார்த்து பேசுவார்கள். அந்தக் குடும்பத்தில் ஆச்சரிய மிக்க பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதை சுட்டிக் காட்டாமல் இருக்கமுடியாது.

அவரின் மூத்த மகள் திருமணம் செய்திருப்பது அவரின் சொந்தச் சகோதரனையே, அதற்குக் காரணம் திருமணத்திற்கு முன் அவர்களிடையில் இருந்த தகாத தாம்பத்திய உறவே. இத்திருமணத்திற்குப் பின் அக்குடும்பத்தின் உறவு முறைகள் தலைகீழாக மாறின. அண்ணன், தம்பி உறவுமுறை மாமன் மருமகனாகவும், அண்ணி என்பவர் மாமியாராகவும், மகள் முறையானவள் மனைவியாகவும், சித்தப்பா என்பவர் கணவனாகவும் ஏனையவர்கள் தமது சிற்றப்பாவை அத்தானாகவும் மாறி அழைக்கவேண்டியிருந்தது.

குடும்ப சீர்கேட்டின் விளைவு கலாச்சாரத்தை அடியோடு மாற்றியது. சகல கரும்புள்ளிகளையும் அங்குள்ள ஊரார் மத்தியிலிருந்து அகற்ற குடும்பத் தலைவன் தனது வீட்டில் தற்பொழுது இரவு பகல் பாராது ஜெப ஆராதனைகளை நடாத்தி வருவதுடன், பேயோட்டும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார். பணம் சம்பாதிக்கும் நோக்கில் இப்படியான காரியங்களில் ஈடுபட்டு வருவதாக அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

அங்கு ஏற்கனவே கொடுக்கல் வாங்கல்களில் முழுக்குடும்பமும் பலரை ஏமாற்றி வந்துள்ளதால் ஊரார் அவர்களை இலகுவில் நம்பத் தயாரில்லை. இருப்பினும் வழமையான பசப்பு வார்த்தைகளால் பலர் அவர்களின் வலையில் விழுவதற்கு வாய்ப்புண்டு எனவும் கூறப்படுகிறது. குறிப்பாக பெண்கள் விடயத்தில் அவர் பலவீனமானவர் என்பதால் ஜெப ஆராதனை, பேயோட்டல் போன்ற நடவடிக்கை களினால் அவரின் இரசணை கொண்ட ஆசைகள் தீர வாய்ப்பு இருக்கலாமல்லவா?

'பட்டு வேட்டி கிடைக்கக் கனவு கண்டவன் விடிந்து பார்த்த பொழுது கட்டியிருந்த கோவனத்தை காணவில்லையாம்.' என கவிஞர் வைரமுத்துவின் வைர வரிகளை நினைவு கூறவேண்டியுள்ளது.

முற்றும்...

– பாலையூற்றான் –

## சீனா அதிரடி



சீன அரசு தங்கள் நாட்டில் இணையதளம் மூலம் ஆபாச படங்கள் வெளிவருவதை முற்றிலும் தடை செய்யும் கொள்கையை உறுதியாக பின்பற்றி வருகிறது. அதன் ஒரு பகுதியாக "Cleaning the Web 2014." என்ற திட்டத்தை சீன அரசு தற்போது புதிதாகக் கொண்டு வந்துள்ளது. இந்தத் திட்டத்தின் படி ஆபாச இணையதளங்களை கண்டுபிடித்துக் கொடுப்பதற்காக வேலைக்கு ஆள் எடுக்கிறது. வருடத்திற்கு $32000 ஊதியமாகக் கொடுக்க சீன அரசு கொடுக்க முன்வந்துள்ளது.

ஏற்கனவே சீனாவில் ∴பேஸ்புக், டுவிட்டர், யூடியூப் போன்றவை தடை செய்யப் பட்டுள்ளன. ஆபாச படங்கள் மற்றும் வீடியோக்கள் அடங்கிய 110 இணைய தளங்களும், 3300 சமூக இணையதளங்களும் சீனாவில் தடைசெய்யப்பட்டுள்ளன. இணைய தளங்களில் ஆபாசப் படங்களை பதிவு செய்தால் ஜெயில் தண்டனை என்ற கடுமையான சட்டமும் அங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக அங்கு ஜெயில் தண்டனையுடன் $40000 வரை அபராதமும் விதிக்கப்படுகிறது.

## அதிசய நாய்

உலகில் முதன்முதலாக கார் ஓட்டும் நாய்!... இனி சாரதிகளுக்கு பஞ்சமே இல்லை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமித்தாய் கொடுத்த பொறுமை

**சிறு கதை . . .**

அவனுக்கு வயது முப்பது. ஓராண்டுக்கு முன்னர்தான் திருமணம் செய்திருக்கிறான். காதல் திருமணம் செய்துகொள்ள அவன் மனதின் அடியாழத்தில் அதிகம் ஆசையிருந்தது. ஆனால் அவனுடைய குடும்பப் பின்னணியும் வகுப்புப் பின்னணியும் அவனைப் பயப்படுத்தியது. யோசிக்க வைத்தது.



அவன் அக்காள் எம்.ஏ படித்து ஆசிரியர் பயிற்சியும் பெற்றிருந்தாள். அவளுக்குத் தொண்ணூறு பவுன் போட்டு நான்கு லட்சம் ரொக்கத்தோடு கட்டிக் கொடுத்தார்கள். இத்தனைக்கும் மாமாவுக்குச் சமையல் பாத்திரங்களை வாடகைக்கு விடும் பிழைப்புத்தான். அவர்கள் வழக்கத் திருமணங்களின் அடிப்படை, பணமாகவும் பொன்னாகவுமே இருந்ததால், அவனுடைய காதலிக்கும் ஆசை மனதளவிலேயே நின்றிருந்தது.

அவன் மருந்துக்கடை வைத்திருக்கிறான். இதற்குத் தோதாகவே அவன் படிக்க வைக்கப்பட்டிருந்தான். வாழ்க்கையில் இலட்சியம் அல்லது சிறப்பு ஆவல் என்றெல்லாம் அவன் தன்னை ஒருபோதும் குழப்பிக் கொண்டதில்லை.

அவனைப் பெற்றவர்கள் சரஸ்வதியை அவனுக்காகப் பார்த்தார்கள். சரஸ்வதி கொழும்பில் ஒரு கல்லூரியில் வேலை செய்கிறாள். திருமணமாகும் பட்சத்தில் இங்கே திருமலையில் வேலை வாங்கித் தந்துவிடுவதாகவும் அவள் பெற்றோர் வாக்களித்தனர். தவிர அக்காளின் திருமணத்தில் விட்ட தொகையை வரும்படியாக்கவும் தோதான இடம். அம்மா தந்த தகவல்கள் இவை. இவற்றை விவாதிக்கவோ, உபரித் தகவல்கள் கேட்கவோ அவனுக்கு வாய்ப்பில்லை.

நூற்றியிருபது பவுனையும் ஆறு லட்சத்தையும் வாங்கிக் கொண்டு அவன் சரஸ்வதியின் கணவன் ஆனான். மணமேடையில் தனதருகே இருந்த சரஸ்வதியைப் பார்த்து அவன் உண்மையிலேயே மகிழ்ந்து போனான். தன் நண்பர்களுக்கு வாய்த்தவர்களைவிடச் சரஸ்வதி அழகுதான்.

ஆனால் இரவில் முதல் சந்திப்பிலேயே அவள் அவனைக் கேட்ட கேள்வியால் திகைத்துப் போனான். "கல்யாணத்துக்கு முன்னே ஒரு முறையாவது என்னைப் பாக்கணும்னோ... பேசணும்னோ உங்களுக்குத் தோணலையா?" சரஸ்வதியின் குரலில் குற்றச்சாட்டு இல்லையென்றாலும் அவனுக்குள் ஒரு துளி பயம் வந்தது. சரஸ்வதி கேட்டது போல் தனக்கு ஏன் தோன்றவில்லை?

தொடர்ந்து வந்த அவர்களது வாழ்க்கைத் தினங்கள் அவனுக்கு விசித்திரமானவை.

எம்.பில்.-லும் பிஎச்.டி.யும் முடித்த பெண்கள் அவன் உறவுகளில் சாதாரணம். ஆனால் அவர்கள் அவன் சமூகத்துப் பெண்களாகவே இருந்தார்கள். படிப்பு அப்பெண்களின் இயல்புகளை மாற்றினது இல்லை. நகை, கார், வீடு... இதுபோன்ற திருமணச் சீர்களோடு படிப்பும் ஓர் உயிரற்ற சீராகவே சேர்க்கப்பட்டிருந்தது.

ஆனால் சரஸ்வதி வேறு மாதிரி இருந்தாள். எதிலும் மிக நேர்த்தியாய்ச் சிந்தித்தாள். செயல்பட்டாள். சரளமான ஆங்கிலம்.. எதையும் தானே யோசித்து முடிவெடுக்கிற தன்மை... உலக அறிவு சார்ந்த அபார ஞானம்... சரஸ்வதிக்குத் தெரியாத விடயங்கள் மிகக் குறைவு என்பதை அவன் வெகுசீக்கிரம் புரிந்து கொண்டான்.

அம்மா, அப்பாவின் பாடு திண்டாட்டமானது. சரஸ்வதியின் அறிவை யோ, அறிவினால் விளைந்த பண்பட்ட நடவடிக்கைகளையோ அவர்களால் சகித்துக் கொள்ள முடிய வில்லை. வீட்டுக் கடமைகளில் சரஸ்வதி தயக்கம் காட்டுவதில்லை. சமைக்கிறாள்... மிக வேகமாய். அம்மாவுக்காகக் காத்திருப்பதில்லை. இவள் சமையல் சுவை வேறாயிருந்தாலும் அவனுக்குப் பிடித்திருந்தது. அனுபவிக்கக் கற்றுக் கொண்டான். சனி, ஞாயிறுகளில் வேலைக்காரியை ஏவி வீட்டைச் சுத்தம் செய்கிறாள். தனக்குத் தேவையான விடயங்களுக்காக அவள் யாருடைய அனுமதியையும் கேட்பதில்லை.

அவனால் சரஸ்வதி மீது குற்றம் காண முடியவில்லை. தான் வெகுநாளாய்க் கனவு கண்ட காதல் அல்லது ப்ரேமை அவள் மீது தனக்கு ஏற்பட்டிருப்பதை உணர்ந்தான்.

இரவு படுக்கையில் மெதுவே அவளிடம் பேச்சுக் கொடுத்தான். "வீட்டு வேலையையும் காலேசையும் கெவனிச்சுக்கிட செரமமால்லியா சரசு. நமக்கு வேண்ணா தனி வீடு பாத்துக்கிடுவமா?" சரஸ்வதி சரியென்றிருந்தால் அவன் உரலிடைத் தானியமாகியிருப்பான். ஆனாலும் அவன் மனது அவனைக் கண்டிக்கத் தூண்டவில்லை. இப்படிக் கேட்கவே அவனால் முடிந்தது. அவனை ஆச்சர்யப்படுத்தும் விதமாகச் சரஸ்வதியின் பதில் இருந்தது. "வீடுன்னா... கொஞ்சம் அப்பிடி இப்பிடித்தான் இருக்கும்... நா சமாளிச்சுக்குவேன். கவலைப்படாதீங்க." அவனுக்குள் நிம்மதியும் கவலையும் ஒரு சேர வந்தது.

ஏதொ பேச்சுவாக்கில் சரஸ்வதி அரசியல் விஞ்ஞானத்தில் முனைவர் பட்டம் வாங்கியிருப்பது தெரிந்தது. அவன் திடுக்கிட்டான். தன்னையே நொந்து கொண்டான்.

பவுனையும் லட்சங்களையும் நிறுத்து, நிறுத்து வாங்கின... கொடுத்த குடும்பப் பெரியவர்களுக்கு இருவரது அறிவுத் தராசும் சமநிலையிலிருக்கிறதா என்று பார்க்கத் தோன்றவில்லையே. இதைத் தன்னிடம் மறைத்த அம்மாவைக் கடிந்து கொண்டபோது அம்மாவுக்கு அவன் கோபம் நியாயமாகத் தெரியவில்லை.

"அவர்களுக்கு வசதியிருக்கிறது. பெண் பிள்ளையைப் படிக்க வைத்திருக்கிறார்கள். இது குடும்பம் நடத்துவதற்கும் குழந்தை பெற்றுப் போடுவதற்கும் எப்படித் தடையாக இருக்க முடியும்" என்று வாதிட்டாள்.

மாலை நேரங்களில் கல்லூரியிலிருந்து திரும்ப வரும்போது சில சமயம் கடைப்பக்கம் வருவாள். அங்கிருந்து அவன் தனது வாகனத்தில் அவளை வீட்டுக்குக் கூட்டி வருவான். இன்றும் வந்தாள். அவன் வாகனம் பழுதாகியிருந்தது. அவன் கவலையோடு இதைச் சொன்னபோது சரஸ்வதி பளிச்சென சிரித்தாள். "அதனால் என்ன? நாம் பேசிக்கொண்டே நடந்து போவோம்" என்றாள். கடையைப் பையனிடம் ஒப்படைத்துவிட்டுத் தெருவில் இறங்கி அவளோடு நடந்தான்.

வீட்டில் அவர்கள் இருவரும் தனியே பேசுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு. அதனால்தானோ என்னவோ சரஸ்வதி பேசிக் கொண்டே வந்தாள். தனது வேலை பற்றி... வீட்டில் ஒரு டியுஷன் சென்டர் நடத்துவது பற்றி... இன்னும் ஏதேதோ... திடீரென, "நீங்கள் கோயிலுக்குப் போனால் என்ன வேண்டிக் கொள்ளுவீர்கள்?" என்று கேட்டாள். இவ்வளவு நேரமும் அவள் பேசியதில் உறுதியான பதில் தர வேண்டிய சந்தர்ப்பம் அவனுக்கு வரவில்லை. "ம்", "ஆமாம்", "இல்லை" போன்ற சொற்களாலேயே அவன் தன்னைக் காத்துக் கொண்டிருந்தான்.

அவன் கோயிலுக்குப் போவது அபூர்வம். ஆண்டுக்கு ஒருமுறை குலதெய்வத்திடம் குடும்பத்தோடு படையெடுப்பு நடக்கும். அப்போதும் தனிச்சையாய்க் கை கூப்புவதும் கன்னத்தில் போடுவதும் நிகழுமே தவிர காரியமாய் எதையும் கேட்டதாய் நினைவில்லை. சரஸ்வதியைக் கட்டின பின்பு இவளோடு சில சமயங்களில் கோயில்களுக்குப் போனதுண்டு. அப்போதும் வேடிக்கை பார்த்துத்தான் பழகியிருக்கிறான். வேண்டிக் கொண்டதில்லை. இதைச் சரஸ்வதிக்கு விவரிக்கத் தன்னால் முடியுமென்று அவனுக்குத் தோன்றவில்லை. நல்ல வேளையாய்ச் சரஸ்வதி அவன் பதிலை எதிர்பார்க்கவில்லை.

"எல்லாரும் நல்லாருக்கணும்னுதான் நாங்க வேண்டிப்போம்... நீங்க அப்படிக் கேக்க முடியாதே... நோயாளி இருந்தாத்தான் வியாபாரம் நடக்கும்" என்றாள் சிரித்தபடி.

தூரத்தில் வீட்டு வாசலில் அம்மா நின்றிருந்தாள்.

"என்னாதிது... வியாபாரம் நடக்கற நேரத்துல கடய விட்டுப்போட்டு வந்திருக்க... சரசுக்குத் தனியா வரத் தெரியாதா?" அம்மாவின் இங்கிதமற்ற விசாரணை அவனைத்தான் விசனப்படுத்தியது. சரஸ்வதி சாதாரணமாய் உள்ளே போய்விட்டாள்.

வர வர சரஸ்வதியின் ஆளுமை அவனைப் பயப்படுத்தியது. அவள் அறிவும் புத்திசாலித்தனமும் மற்றவர்களால் புரிந்து கொள்ளப்படாமல் போகிறபோது அவனுக்குப் பதட்டம் வருகிறது. விலையுயர்ந்த கண்ணாடிப் பாத்திரத்தைக் கையில் கொண்டு நடக்கும் சிறு குழந்தையின் மனநிலையில் அவனிருக்கிறான். தடுமாறுகிறான். கண்ணாடிப் பாத்திரம் அவனுக்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஆனால் இதைக் கவனமாய்க் கையாளும் திறமை தன்னிடமில்லை என்ற கசப்பு உணர்வு தொண்டையில் நிற்கிறது. அவனுடைய கவனக்குறைவும் தடுமாற்றமும் பாத்திரத்தையே பாதிக்கும் என்பதையும் அவன் அறிந்திருந்தான். இதனால் அவன் கவலை அதிகரித்துக் கொண்டே போகிறது.

தங்களுக்குப் பிடிக்காதவர்களை இடறிவிட. அம்மாவின் கணக்கில் சரஸ்வதி எப்போதோ எதிரியாகியிருந்திருக்கிறாள். அவன்தான் கவனிக்கத் தவறியிருக்கிறான்.

யாரோ ஓர் ஏழை மாணவனுக்குத் தன் சம்பளத்திலிருந்து பீஸ் கட்டிவிட்டு சரஸ்வதி வந்த அன்று நெருப்பு மூண்டது. "உன் சம்பாத்தியம் இந்த வீட்டுக்குச் சொந்தம். இவ்வளவு பெரிய தொகையை எப்படி இனாமாகக் கொடுக்கலாம்? அதுவும் எங்களைக் கேட்காமல்..." இது அம்மா அப்பாவின் வாதம். பெரியவர்களை மதிக்கும் பண்பில்லை. சிக்கனமில்லை. வாய் நீளம். குடும்பம் நடத்தத் தெரியவில்லை... இது சரஸ்வதியைப் பற்றிய அவர்களது அனுமானங்கள்.

"எதிர்பாராத இக்கட்டு. நன்றாகப் படிப்பவனின் வாழ்வு வீணாகுதல் கூடாது. அதனால் கொடுத்தேன். இறுதி நேரத்தில்தான் பிரச்சனை என்னிடம் வந்தது. யாரிடமும் சொல்லவோ, கேட்கவோ எனக்கு அவகாசம் இருக்கவில்லை. தவிர எனது வருமானத்தில் எனக்குத்தான் முதல் உரிமை. ஊதாரித்தனம் கண்டிக்கப்பட வேண்டியதுதான். ஆனால் நான் செய்தது உதவி. இதை என் கணவர் வேண்டுமானால் ஆட்சேபிக்கலாம். அவரும் என்னை நிர்ப்பந்திக்க முடியாது" இது சரஸ்வதி.



வழக்கு அவனுக்காகக் காத்திருந்தது. இன்றைய பிரச்சனை என்னவோ சிறியதானாலும் அதன் வேர்கள் திருமணம் ஆன நாள் வரை பின்னோக்கி நீண்டிருந்தன. அப்பா அவ்வப்போது எடுத்துக் கொடுக்க அம்மா விலாவாரியாய் பேசித் தீர்த்தாள். சரஸ்வதியின் அறிவின் மீதிருந்த எரிச்சல், தைரியத்தின் மீதிருந்த பொறாமை எல்லாம் வார்த்தைகளாய் வடிவெடுத்து வந்து கொட்டின.

அத்தனையையும் கேட்டுக் கொண்டு சரஸ்வதி சோபாவின் ஓர் ஓரத்தில் உட்கார்ந்திருந்தாள். அவள் கண்கள் அவன் மீதே நிலைத்திருந்தன. அவன் சொல்லப் போகும் பதிலுக்காகக் காத்திருந்தன. மற்றபடி அவள் முகத்தில் கோபமோ, ஆவேசமோ, அழுகையோ எதுவுமேயில்லை.



அவன் சரஸ்வதியைப் பார்த்தான். அறிவு இவள் இயல்பு. திறமை இவள் நிறம். புத்திசாலித்தனம் இவளுள் உயிராய் ஓடுகிறது. தன்னம்பிக்கையைக் காற்றாகச் சுவாசித்து பயத்தைக் கழிவாய் வெளியேற்றிவிடுகிறவள்.

அவன் உடனே பதில் சொல்லாதது அவன் குடும்பத்தாரை ஏமாற்றமடையச் செய்தது. அவன் தன் படுக்கையறைக்குள் புகுந்து தன்னை மறைத்துக் கொண்டான். சற்று நேரத்தில் உணவுத் தட்டோடு உள்ளே வந்தாள் சரஸ்வதி.

சற்று முன்னர் அடித்த புயலின் வடு அவள் முகத்தில் இல்லை. எப்போதும் போல் சாதாரணமாய் அவனைப் பார்த்தாள்.

"இந்த வீட்டில் எனக்கு மனைவியாக உன்னால் இருக்க முடியுமென்று தோன்றுகிறதா சரஸ்வதி?" என்றான் அவன் கவலையோடு!!!

**நன்றி - தினமணி கதிர்**

முற்றும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமுரசு



## ... முட்டுக்கட்டை ...

கொடுங்கடல் பசியால் 'குமரி' யைத் தின்றது!
நடுங்கினன் ஒருகணம், நடந்தான் - பரந்தான்!
எங்குமே தமிழன்! இனம் பல வானான்!
தங்கிய நாடெல்லாம் தாய் நாடாக்கினான்!
வரலாறு பிந்தியே வாயைத் திறந்தது!
தரப் பெறுகின்றோம், தாரணிவியக்கும்!
'யவனர்தந்த வியன் மா நன் கலம்
பொன்னோடு வந்து கறியொடு பெயரும்!' (அ149)
'வலவன் ஏவா வானவூர்தி'யும்
நலமுடன் கண்டுமுன் னேறிய நாளிலே....
ஆடுமாடுகள் முனடநடந்திட, ஆரணங்குகள் பின்தொடர்ந்திட, (க.தா)
வந்தனர் புல்லார்- வடபூணூலார்!
முட்டுக்கட்டையே, முன்னேற்றமில்லை!
குட்டினர் தலையில், குனிந்தோம் - குனிகிறோம்!
வரலாறு மெதுவாய் வாய் மூடியதாம்!
அரகர... தேவா, அத்துடன் நின்றதே!
மீதியை முடிந்தால் விளங்கிக்கொள்ளுக!
சாதியோ நான்காம், தமிழன் கடைசியாம்!
நெற்றிக் கண்ணால் நீறாக்கிடாமல்
கற்க கசடற(க்) கற்றபின் நிற்க'வே!(கு391)

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு – கிண்ணியா)

## புதிய அவதாரங்கள்

துரியோதனின்
துகிலுரிந்த அரசவைபோல்
மானுடம் மௌனித்த
சிறைவாழ்வில் கசங்கி
குருதிகள் நனையும்
மண்ணில் மிதித்து
நாளைய விடியலின்
வாயிலை நோக்கி
சென்றிடும் தூரப்பயணத்தில்
மனித விழுமியம் காத்திட
நாங்களும்
அவதாரம் எடுக்கின்றோம்.
நாங்கள்
மௌனித்த பிறகு
நீங்கள் விழித்திருப்பீர்கள்
அதன்பின்.......
முல்லைவாய் அவிழ்ந்துவந்து
முத்தமிட்ட தென்றலும்
கடலைக்கிழித்து வந்து
கை குலுக்கும் செங்கதிரும்
வெறுமையின்பின் தோன்றும்
வசந்தத்தின் அறிகுறியே

திருமலை சுஜிதா

## இதமான பேச்சும் மத மாற்றமும்

இதமான பேச்சு நெஞ்சில்
இடம் பிடிக்கும் தமிழ்
பதமான மருந்து உடலுக்கு
பயனளிக்கும்!

மனம் மாறும் மனிதர்கள்
இருக்கும் வரை இங்கு
மத மாற்றம் செய்வோர்கள்
வலம் வருவர்!

வரப் பிர சாதங்களை
வாங்கிக் கொண்டு
மதம் மாற்றம் பெறுவோர்கள்
மாற்றான் கைப் பொம்மைகள்!

எடுப்பார் கைப்பிள்ளையாக
இருப்பதால் தான் இங்கு
வடுக்களை சுமந்து
மதம் மாறும் நிலை!

சோனபூர் கவிக் குயிலன்



பல்லவர் கால கலையம்சம் கொண்ட

# 'நாலந்த சிலை மண்டபம்'

1970 களில் இந்த நினைவுச் சின்னம் இருந்த இடம் முற்றாகவே நீருக்குள் அமிழ்ந்து அழியும் நிலை ஏற்பட்டது.

பாகம் : 02

கடந்த வார தொடர்ச்சி ..

அப்போது இச்சின்னத்தை ஒவ்வொரு கல்லாகக் கழற்றி எடுத்த தொல்லியல் துறையினர் அதனை முன்னைய இடத்திலிருந்து சில அடிகள் தொலைவில் (இப்போது உள்ள இடத்தில்) நிலத்தினை மண்போட்டு உயர்த்தி



பின்னர் அதில் மீளக் கட்டினர்.

இந்தத் தொல்லியல் களம் ஒரு சிலை மண்டபத்தையும், ஒரு சிறிய தாது கோபுரத்தையும் உள்ளடக்கியுள்ளது. சிலை மண்டபம் இந்துக் கோயில் போன்று கட்டிட அமைப்புக்களை உள்வாங்கி அமைக்கப்பட்டுள்ளது. இதன் உள்ளே பௌத்த, இந்து சிற்பங்கள் காணப்படுகின்றன.

பல்லவ கட்டிட கலையம்சம் கொண்ட இச்சிலை மண்டபம் முகமண்டபம், உள்மண்டபம், கருவறை என மூன்று பகுதிகளால் ஆனது.

அத்துடன் பல்லவர்கள் மாமல்லபுரத்தில் கட்டிய பஞ்சரதங்கள் எனப்படும் கட்டிடங்களில் ஒன்றான கணேச ரதத்தின் விமான அமைப்பைத் தழுவியே நாலந்த சிலை மண்டபத்தின் விமானமும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிலை மண்டபத்தின் கருவறையில் புத்தர் சிலையுடன் மகாயான போதிசத்வர் அல்லது அவலோகிதேசுவரர் எனக் கருதத்தக்க சிற்பமும் ஒரு பிள்ளையார் சிலையும் காணப்படுகிறது. இச்சிலை மண்டபத்தின் சுவர்களில் நமக்கு நன்கு பரீட்சயமான இந்து சிற்ப வடிவங்கள் பலவற்றினைக் காணலாம். காவற் தெய்வங்கள், காமசூத்திரா சிற்பம், இலட்சுமி சிலை, ஆவுடையார் என்று நீண்டு செல்கிறது இந்தப் பட்டியல்.

சிலவேளைகளில் வரலாறுத் தேடல்கள் பல சுவாரிசயங்களைக் கொண்டு கட்டியெழுப்பட்ட மர்ம நாவலைப் போன்று காட்சிதரும். இந்தச் சிலை மண்டபத்திற்கும் அப்படியொரு பக்கமிருப்பது விசாரித்தபோது அறியக்கிடைத்தது.

அதற்குக் காரணம் இங்கிருக்கும் குபேரனது சிலையும், இன்னும் அடையாளம் காணப்படாத ஒரு சிலை உருவமும் ஆகும். இவை இரண்டையும் பற்றிக் கீழே குறிப்பிடப்படும் செய்திகளின் வரலாற்று ஆதாரங்கள் உறுதிப் படுத்தப்படாதவை.

சிங்களக் கிராமங்களில் காணப்படும் செவிவழிக் கதைகளை அடிப்படையாகக் கொண்டவை என்பதை கவனத்தில்கொள்ளவேண்டும்.

இந்து தொன்மவியலின் அடிப்படையில் குபேரன் செல்வத்தின் அதிபதியாவார். விச்வரஸ் மற்றும் கோகஸியின் மகனான இவருக்கு இராவணன், கும்பகர்னன், விபீஷணன் என்ற சகோதரர்களும், சூர்ப்பனகை என்ற சகோதரியும் இருந்தனர் என்பது இதிகாசங்கள் வாயிலாக நமக்குக் கிடைக்கும் செய்தி.

பௌத்த மதத்திலும் குபேரன் ( කුවේර රජ ) உண்டு. அங்கு இவரை வைஸ்ரவணா என்று வழிபடுகிறார்கள். இலங்கையில் சிங்களவர் குபேரன் இலங்கையை ஆண்ட ஒரு அரசன் எனும் நம்பிக்கையை கொண்டுள்ளனர். இலங்கையில் இராவணனின் ஆட்சிக்கு முன்பு இவர் இலங்கையை ஆண்டதாக கிராமப்புற சிங்களவரிடையே நம்பிக்கைகள் உள்ளன.

இச்சிலை மண்டப கட்டிடச் சிற்பங்களில் காணப்படும் மிக முக்கிய அம்சங்களில் ஒன்று இந்தக் குபேரன் சிலையாகும். இவற்றோடு இதற்கு எதிர் முனையில் இருக்கும் இன்னும் அடையாளம் காணப்படாத ஒரு சிலை உரு இந்திரஜித் உடன் தொடர்புபட்டது.

இந்திரஜித் இராமாயணக் கதையில் வரும் இராவணனின் மகனாவான். மேகநாதன் என்ற இயற்பெயருடைய இவன் தேவர்களின் அரசனான இந்திரனை வென்று சிறைப்படுத்தியமையால் இந்திரனை வென்றவன் என்று பொருள்படும் இந்திரஜித் என்ற பட்டப்பெயர் இவனுக்கு பிரம்மாவால் வழங்கப்பட்டது என்பது இதிகாசத்தின் வாயிலாக நமக்குக் கிடைக்கும் தகவல்.

மிகப்பழமைவாய்ந்த சிங்களக் கிராமங்களில் இந்திரஜித் பிரம்மாவை வேண்டித் தவம் செய்த இடமாக



இத்தலத்தைக் கருதுகிறார்கள். அவர்கள் இராவணனை 'Gange Bandara Deviyo' (A Synonym for King Raavana) என்று வணங்கும் வழக்கம் உடையவர்கள்.

இவர்களிடையே பரவலாக உள்ள கர்ணபரம்பரைக் கதைப்படி, பண்டைய நாட்களில் ( இவ்வாலயம் அமைவதற்கு முன்) இந்திரஜித் இப்பிரதேசத்தில் இருந்து மிகக் கடுமையான தவம் ஒன்றினை பிரம்மாவை நோக்கி மேற்கொண்டான். அது அதிக வலிமை கொண்ட ஒரு ஆயுதம் அல்லது விமானம் ஒன்றினைப் பெறுவதை நோக்கமாக கொண்ட தவமாகும்.

எனினும் அத்தவம் குழப்பப்பட்டதனால் அதனை அவனால் அடையமுடியாது போனது என்கிறார்கள்.

இந்த நிகழ்வினை மையப்படுத்தியே பின்னாட்களில் இந்ததத்தலம் அமைக்கப்பட்டபோது தவத்தில் இந்திரஜித்திற்கு உதவிய அதி சக்திவாய்த்த மனிதர் அல்லது தேவரைக் கௌரவிக்கும் முகமாக அவரது உருவினை கட்டிடத்தில் வைத்ததாக கருதுகிறார்கள்.



சிலை மண்டபத்தின் விமானத்தின் கூரையின் ஒரு பக்கம் குபேரனும் மறுபக்கம் அடையாளம் காணப்படாத ஒரு சிலை உருவும் இருப்பதற்கான கதை இதுதான். இக்கதைகளின் உண்மைத்தன்மை கேள்விக்குரியது என்றாலும் இக்கட்டிடம் இன்னும் ஆராயப்படாத பல வரலாற்றுப் புதையல்களை தன்னகத்தே கொண்டிருக்கிறது என்பதை மட்டும் உறுதிபட நமக்குப் புலப்படுத்துகிறது. இந்தக் கட்டிடத்தின் முன்மண்டப கூரையாக இருந்திருக்கக்கூடிய பல கற்தூண்கள் அருகில் சிதறிக் கிடப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

மாத்தளைக்கும், தம்புள்ளைக்கும் இடையே இவற்றிலிருந்து ஏறத்தாள சம அளவு தொலைவில் உள்ள இச்சிலை மண்டபம் இவ்விடங்களுக்குச் சுற்றுலா செல்லும் வரலாற்றில் ஆர்வமுள்ள நண்பர்களால் தவிர்க்கக்கூடாத இடமென்பதில் ஐயமில்லை.

முற்றும்..

வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகைகளுக்கிடையில் மோதல்

பாலிவுட் நடிகைகளான Sonali Raut மற்றும் Zoya Afroz ஆகிய இருவரும் கபில்ஷர்மாவின் காமெடி நைட் வித் கபில் என்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்ள தொலைக்காட்சி



அரங்கத்திற்கு வந்திருந்தனர். இருவரிடமும் மாறி மாறி கபில் ஷர்மா பேட்டி எடுத்துக்கொண்டிருந்தபோது, கவர்ச்சி காட்டுவது குறித்து பேச்சு வந்தது.
அதில் சோனாலி தெரிவித்த ஒரு கருத்துக்கு நடிகை ஜோயா அர்.:.ப்ஸ் கடும் கண்டனம் தெரிவித்தார். இதனால் ஆத்திரமடைந்த சோனாலி திடீரென ஜோயாவின் கன்னத்தில் அறைந்தார். பின்னர் இருவரும் மாறி மாறி ஒருவரை அடித்துக்கொண்டு ஆக்ரோஷத்துடன் கட்டிப்பிடித்து உருண்டு சண்டை போட்டனர். இதனால் படப்பிடிப்பு தளத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



# பிரபல நடிகை கைது

தென்னிந்திய படங்களில் நடித்ததை விடவும் உச்சகட்ட கவர்ச்சியை வெளிப்படுத்தி நடிப்பதற்கும் அங்குள்ள டைரக்டர்களுக்கு உத்தரவாதம் கொடுத்து நடித்து வரும் இலியானா, தற்போது வருண்தவானுக்கு ஜோடியாக மெயின் தேரோ ஹீரோ என்ற படத்தில் நடித்துள்ளார்.
போலி வாகனத்தட்டு பொருத்திய காரில் இலியானா பயணித்தபோது அவரையும், அவருடன் சென்றவர்களையும் மும்பை போலீசார் கைது செய்தார்களாம். அதையடுத்து உடனடியாக இலியானா விடுவிக்கப்பட்டபோதும், இந்த செய்தி மும்பை வட்டாரத்தை கலக்கி விட்டதாம். இதுவரை அந்த படத்திற்காக மும்பையிலுள்ள முக்கிய ஏரியாக்களில் வருண்தவான், இலியானா இருவரும் செய்து வந்த பப்ளிசிட்டியை விட இது பெரும் பப்ளிசிட்டியாகி உள்ளதாம்.

# ஆன்ரியா குத்தாட்டம்

விஷால் மற்றும் ஸ்ருதிஹாசன் நடிப்பில் ஹரி இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் 'பூஜை''. இந்த படத்தின் படப்பிடிப்பு கடந்த வாரம் ஆரம்பித்து விறுவிறுப்பாக நடந்து வருகிறது. பூஜை படத்தின் படப்பிடிப்பில் சண்டைக்காட்சியில் நடித்தபோது விஷால் காயமடைந்து சிகிச்சை பெற்று வருவதால், அவர் இடம்பெறாத மற்ற காட்சிகள் படமாக்கப்பட்டு வருகிறது.



இந்த படத்தில் இடம்பெறும் குத்துப்பாட்டு ஒன்றிற்கு நடனம் ஆட ஒப்புக்கொண்டுள்ளார் ஆண்ட்ரியா. ஆண்ட்ரியா ஒரு பாடலுக்கு நடனம் ஆடுவது இதுவே முதல்முறை. படுகவர்ச்சியான உடையில் அவர் ஆடும் குத்துநடனம் படப்பிடிப்பு சென்னையில் உள்ள ஒரு ஸ்டுடியோவில் ரகசியமாக நடந்து வருகிறது.

# சினிமுரசு

## சினிமா குறுஞ்செய்திகள்



- **அஞ்சான் ரீமேக் படமா!!**

அஞ்சான் படம் குறித்து சமீபத்தில் பேட்டியளித்த இயக்குனர் லிங்குசாமி "நாயகன் படத்தில் கமல்ஹாசன் நடித்த அற்புதமான நடிப்பை நான் அஞ்சான் படத்தில் சூர்யாவிடம் பார்த்தேன்" என்று கூறியுள்ளார். இதனால் அஞ்சான் திரைப்படம் நாயகன் படத்தின் ரீமேக்காக இருக்கும் என கருதப்படுகிறது.

- **கங்கனாவுக்கு பெண்கள் அமைப்பு கண்டனம்**

பாலிவுட் நடிகை கங்கனா ரனாவத், பாலிவுட் பத்திரிகை ஒன்றுக்கு கவர்ச்சியான உடையுடன் மது குடிப்பது போன்றும் சிகரெட் புகைப்பது போன்றும் கொடுத்துள்ள போஸ்களால் கடும் கண்டனத்திற்கு ஆளாகியுள்ளார்.

- **ரஜனியின் லிங்கா திடீர் ரத்து**

"லிங்கா" படப்பிடிப்புக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தும் போராட்டக்குழுவினர் படப்பிடிப்பு நடத்த விடாமல் தொடர்ந்து போராட்டம் செய்ததால் திட்டமிட்டபடி இயக்குனர் கே.எஸ்.ரவிகுமாரால் படப்பிடிப்பு நடத்த முடியவில்லை.

- **நடிகை ஊர்வசி மீண்டும் ....**

கடந்த நவம்பர் மாதம் சிவபிரசாத் என்பவரை இரண்டாவது திருமணம் செய்துகொண்டார். 46 வயதான ஊர்வசி தற்போது கர்ப்பமாக இருப்பதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

- **சிம்பு - நயனுக்கு ஒரு கோடி கொடுத்தாரா?**

மீதித்தொகை ரூ.1 கோடியை கொடுத்தால் மட்டுமே அடுத்தகட்ட படப்பிடிப்பிற்கு வருவதாக நயன் கறாராக கூறிவிட்டதால் படம் திடீரென தடைபட்டது. திடீரென ரூ.1 கோடியை புரட்ட தயாரிப்பாளரால் முடியாததால், இந்த படம் கைவிடும் நிலைக்கு வந்தது. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இது எந்தக்காரணத்தை முன்னிட்டும் தடைபடக்கூடாது என்ற காரணத்தால் சிம்புவே நயன்தாராவுக்கு தரவேண்டிய தொகையை கடனாக தருவதாக ஒப்புக்கொண்டதாகவும் தெரிகிறது.

- **ரஜனியுடன் மோதும் தீபிகா படுகோனே**

வரும் 9ஆம் தேதி உலகம் முழுவதும் பிரமாண்டமாக ரிலீஸ் ஆகவுள்ள கோச்சடையான் திரைப்படத்தில் ரஜினியுடன் தீபிகா படுகோனே மோதும் ஆக்ரோ'மான சண்டைக்காட்சி உள்ளதாக இயக்குனர் சௌந்தர்யா கூறியுள்ளார். இந்த படத்தின் ஹைலைட்டாக இந்த சண்டைக்காட்சி இருக்கும் என்றும், ரசிகர்களுக்கு இந்த சண்டைக்காட்சிகள் புதுமையான அனுபவமாக இருக்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# சூர்யா படத்தில் ஷாருக் தலையீடு



பாரதிராஜாவின் இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்த ஒரு கைதிய ரஸ்தா என்ற பெயரில் அமிதாப்பச்சனை வைத்து ஹிந்தியில் எ சுமாராகத்தான் ஓடியது. ஆனால் இந்த படத்தின் மூலமாகத்தான் Tahil என்ற நடிகர் பாலிவுட்டில் பிரபலமானார்.
சூர்யாவை வைத்து எடுத்துக்கொண்டிருக்கும் படத்தில் மிக முக்கிய ஒரு கேரக்டரை Talip Tahil க்கு கொடுத்துள்ளார் லிங்குசாமி. இந்த கேரக்டரை நாசர் நடித்தால் நன்றாக இருக்கும் என சூர்யா எண்ணியிருந்தாராம். ஆனால் ஷாருக்கான் Talip Tahilஐ அந்த கேரக்டருக்கு லிங்குசாமியிடம் பரிந்துரை செய்ததால் வேறு வழியின்றி லிங்குசாமி அவரையே ஒப்பந்தம் செய்துவிட்டார். இதனால் சூர்யா சிறிது அதிர்ச்சியடைந்தாலும் வெளியே காட்டிக்கொள்ளவில்லையாம்.

# நீ எங்கே என் அன்பே

விமர்சனம்

காதலித்து திருமணம் செய்துகொண்ட நயன்தாரா, இருவீட்டார்களின் பெற்றோர்களின் எதிர்ப்பு காரணமாக வெளிநாட்டில் செட்டில் ஆகிறார். கணவர் வேலை விஷயமாக இந்தியா சென்றவர் அவரிடம் இருந்து எந்தவொரு தகவலும் இல்லை என்பதால் அவரை தேடி இந்தியா வருகிறார். அவர் ஐதராபாத் வந்திறங்கும் நாளில் ஐதராபாத்தில் வெடிகுண்டு வெடிக்கிறது.
இதனிடையே காவல்துறை அதிகாரி ஒருவர் தன்னுடன் படுக்கையை பகிர்ந்து கொண்டால் உன் கணவனை கண்டுபிடித்து தர உதவி செய்வதாக டார்ச்சர் செய்கிறார் அந்த



போலீஸ் அதிகாரியிடம் இருந்து நயன்தாரா தப்பித்தாரா? கணவரை கண்டுபிடித்தாரா? வெடிகுண்டு சம்பவத்திற்கு காரணமாக தீவிரவாதியை போலீஸார் பிடித்தார்களா? என்பதை த்ரிலிங்குடன் கூறியிருக்கிறார் இயக்குனர் சேகர் கம்முலா.



தெலுங்கின் பிரபல நாவலாசிரியர் எண்டமூரி வீரேந்திரநாத் அவர்கள்தான் திரைக்கதை. படம் ஆரம்பித்தது முதல் முடியும் வரை செம விறுவிறுப்பு. தேவையில்லாத டூயட், பாட்டு, காமெடி என கதையை திசைதிருப்பாமல் கொண்டு சென்றது பெரிய ஆறுதல்
நயன்தாராவின் முகமும் கண்களுமே அப்படி நடிக்கின்றது. நம்பர் ஒன் நடிகை என்பதை மீண்டும் நிரூபித்துள்ளார். அடுத்து பாராட்டுக்குரியவர் இசையமைப்பாளர் கீரவானி. பின்னணி இசையில் வெளுத்து வாங்கியிருக்கிறார். முதல்பாதி கொஞ்சம் மெதுவாக நகர்ந்தாலும் இரண்டாவது பாதி ஜெட் வேகம். ஹீரோவே இல்லாமல் ஒரு படத்தை விறுவிறுப்பாக கொண்டு சென்றுள்ளனர்.
கண்டிப்பாக ஒருமுறை பார்க்கலாம்.

# மீண்டும் சேரும் அஜித்– த்ரிஷா



கௌதம்மேனன் இயக்கும் தனது 55-வது படத்தில் இரண்டு வேடங்களில் நடிக்கிறார் அஜீத். சால்ட் அண்ட் பெப்பர் கெட்டப்பில் போலீஸ் அதிகாரியாக தற்போது நடித்துக்கொண்டிருக்கிறார். அந்த அஜீத்தின் ஜோடியாக அனுஷ்கா நடித்து வருகிறார்.

இதையடுத்து, இன்னும் சில நாட்களில் இரண்டாம்கட்ட படப்பிடிப்பு தொடங்கவிருக்கிறது.

அப்போது இளவட்ட அஜீத்தாக இன்னொரு கெட்டப்பில் அவர் நடிக்கிறார். ஆனால் அந்த அஜீத்துக்கு ஜோடி உள்ளதா? இல்லையா? என்கிற கேள்விகள் எழுந்து கொண்டிருந்த நிலையில், கௌதம்மேனனின் விண்ணைத்தாண்டி வருவாயா மெகா ஹிட் படத்தில் நடித்து அவரது செண்டிமென்ட் நாயகி பட்டியலிலும் இடம் பிடித்திருக்கும் த்ரிஷா இன்னொரு அஜீத்துக்கு ஜோடியாக நடிப்பதாக கூறப்படுகிறது.

த்ரிஷா, அனுஷ்காவை விடவும் பாடல் காட்சிகளில் படுகவர்ச்சியாக களமிறங்குகிறாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூகுள் கிளாஸ்



இணைய வசதியுடன், பல்வேறு சிறப்பம்சங்களை உள்ளடக்கிய கூகுள் கிளாஸ் அமெரிக்காவில் கடந்த வாரம் விற்பனைக்கு வந்தது. கூகுள் கிளாஸின் விலை 1,500 டாலர்கள் (சுமார் ரூ.90 ஆயிரம்) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆன்லைனில் பதிவு செய்தவர்களுக்கு இது விற்பனை செய்யப்படுகிறது.

அதேசமயம் வரையறுக்கப்பட்ட அளவு மட்டுமே விற்பனை செய்யப்படவுள்ளதால், எத்தனை கூகுள் கிளாஸ்கள் விற்பனை செய்யப்படும் என்பதைத் தெரிவிக்கவில்லை. எக்ஸ்புளோரர் வகை கூகுள் கிளாஸில் வழக்கமான மூக்குக் கண்ணாடியில் இருக்கும் கண்ணாடிகள் இருக்காது. வலது கண் முன்பாக அமைக்கப்பட்டிருக்கும் திரையில், இணையதள வசதியைப் பயன்படுத்தலாம்.

வரும் ஜூன் இறுதியில், கூகுள் கிளாஸ் தொடர்பான முழு விவரங்கள் அனைத்தையும் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# INTRO VIDEOS

பிரபலமானதும் முதன்மை வகிப்பதுமான யூடியூப் வீடியோ தளமானது தனது தளத்தின் மூலம் வீடியோக்களை பகிர்பவர்களுக்காக புத்தம் புதிய வசதி ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது.

அதாவது யூடியூப்பில் பகிரப்படும் வீடியோக்களை சேனல் முறையில் வகைப்படுத்த முடியும், அவ்வாறு வகைப்படுத்தப்படாத வீடியோக்களை பயனர்களை பார்க்க வைப்பதற்காக தமது மூவிக்களின் ஆரம்பத்தில் இணைக்க முடியும்.

இவ்வசதி Intro Videos என அழைக்கப்படுகின்றது. இதற்காக மூன்று செக்கன்கள் வரை ஓடக்கூடிய வீடியோக்களை பயன்படுத்த முடியும்.

# முற் காலாண்டு வருவாய்

சமூக வலைத்தளங்களுள் முன்னணியில் திகழும் பேஸ்புக் நிறுவனம் 2014ம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்கான தனது வருவாய் தொடர்பிலான அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

இதன்படி முதலாவது காலாண்டு வருமானமாக 2.5 பில்லியன் டொலர்களைப் பெற்றுள்ளது.

இது கடந்த வருடத்தின் முதலாவது காலாண்டு வருமானத்தை விடவும் 72 சதவீத அதிகரிப்பை கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாதம் தோறும் 1.28 பில்லியன் வரையானவர்கள் பேஸ்புக் தளத்தில் இணைந்திருப்பதாகவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# விளையாட்டுப் பையன்

## MOUSEன் தேவை



Mouseன் பயன்பாடுகளை தெரிந்து வைத்திருப்போர்க்கு அதன் பொத்தான்களின் பயன்பாடு பற்றி அதிகம் தெரிவதில்லை. குறிப்பாக கம்ப்யூட்டர் பயனர்கள் பலரும் டெஸ்டாப்பில் ரைட் கிளிக் செய்து Refresh மட்டுமே செய்வார்கள்.

ரைட் கிளிக் செய்யும்போது தோன்றும் விண்டோவில் மேலும் பல பயனுள்ள வசதிகளும் உள்ளன. Right Click செய்யும்பொழுது முதலில் தெரியும் பயன்பாடு view. இது டெஸ்டாப்பில் இருக்கும் அப்ளிகேஷன்களின் ஷார்ட் கட்கள் மற்றும் ஐகான்களை பார்வைக்கு தோற்றம் அளிக்கும் விதத்தை மாற்றுவதற்குப் பயன்படுகிறது. இதில் உள்ள ஆப்சன்கள்,

- Auto arrange icons:

இந்த வசதியானது டெஸ்க்டாப்பில் அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ள ஐகான்களை தானாகவே ஒழுங்குபடுத்திக்கொள்ளும்.



- Align icons to grid:

இந்த வசதியை தேர்ந்தெடுக்கும்பொழுது டெஸ்க்டாப்பில் உள்ள ஐகான்களை grid– ல் அலைன் செய்து அழகாக காட்டும்.

- Show desktop icons:

இந்த வசதியை செயல்படுத்தும்பொழுது டெஸ்க்டாப் ஐகான்கள் தெரியும். டிக் மார்க்கை எடுத்துவிட்டால் டெஸ்க்டாப்பில் ஐகான்கள் மறைந்துவிடும்.

- Show gadgets:

விண்டோஸ் 7 ல் பயனுள்ள calendar, clock, cpu meter, currency, feed headlines, picutre puzzle, slide show, weather, windows media center போன்ற கேட்கெட்கள் உள்ளன.

அவற்றை பயன்படுத்திக் கொண்டிருந்தால், அவற்றை டெஸ்டாப்பில் தோன்றச் செய்வதற்கும், தேவையில்லையெனில் மறையச் செய்வதற்கும் பயன்படும் வசதி இதுவாகும்.

- Sort By:

இந்த வசதியின் மூலம் டெஸ்டாப்பில் உள்ள ஐகான்களை, Name, Size, Item type, Date modified என்ற வகைகளில் வரிசைப்படுத்தலாம்.

# ஒரு கொலையின் கதை

2-10

மாயன்

**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

அக் கையேடு தான் இக் கொலைக் குற்றத்தின் மூன்றாவது சந்தேக நபரை உலகிற்கே வெளிக் கொண்டுவந்த இரண்டு தடயங்களில் ஒன்றைத் தன்னகத்தே வைத்திருந்த மடிக்கணணியை புலனாய்வாளர்களுக்கு காட்டிக் கொடுத்தது.

ஆனால் அந்த மடிக்கணணி அந்த அறையில் இருக்கவில்லை.......

..............................................................................

அம்மடிக்கணணி அவ்வறையில் இல்லை என்றவுடனேயே புலனாய்வாளர்களின் புலன் விழித்துக்கொண்டது.

அவர்கள் மேசைமேற் கணணியை ஆராய்ந்த போது அது பெரிதாகப் பயன்பட்டமைக்கான சான்றுகள் எவற்றையும் காணமுடியவில்லை. எனவே முக்கியமான பல விடயங்கள் அந்த மடிக்கணணியிலேயே இருக்கின்றது என்பதை அவர்கள் புலனுணர்ந்து கொண்டனர்.

அவ்வாறாயின் அந்த மடிக் கணணி எங்கே...? அழிக்கப்பட்டு விட்டதா... அல்லது எங்காவது ஒளிந்திருக்கின்றதா?...

அந்த முடிச்சை அவிழ்ப்பதற்கு அவர்கள் இலகுவான திட்டமொன்றைத் தீட்டிக் கொண்டனர்.

புலனாய்வாளர் ஒருவர் அந்த அறையை விட்டு வெளியே வந்தார்.

வெளியே விறாந்தையில் அவர்கள் மூவரும் அமைதியாக அமர்ந்திருப்பதை அவர் கண்ணுற்றார். புலனாய்வாளர்கள் அந்த வீட்டில் இருந்த போது அந்த வீட்டிற்கு வந்த தொலைபேசி அழைப்புக்கள் எல்லாவற்றையும் ஒலிபெருக்கியின் ஊடாகவே பதிலளிக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர் அவர்கள். அன்றைய நாள் அவர்களுக்குரிய நாளாக இல்லை... எனவே அவர்களின் நாளாந்த நடவடிக்கைகள் எவையும் நிறைவேற்றப் படாமலிருந்தன. அவற்றை நிறைவேற்ற அவர்கள் பயந்தவர்களாக இருந்தார்கள்...... அவர்கள் இறந்து போன மணித்தியாலங்களை அந்த விறாந்தையிலேயே பெருமளவிற்குக் கழித்தார்கள்......

அந்த இளம் தாயை நோக்கி அந்தப் புலனாய்வாளர் வேண்டுகோளொன்றை விடுத்தார்.

" கொஞ்சம் தண்ணீர் தாருங்கள் அருந்துவதற்கு"....

அந்த வேண்டுகோளின் அர்த்தத்தை அந்தப் பெண்மணி உடனடியாகவே புரிந்து கொண்டாள்.

குறித்த அந்தப் புலனாய்வாளர் முதன் முதலில் அந்த வீட்டிற்கு வந்தபோதும் அவ்வாறானதொரு வேண்டுகோளை விடுத்திருந்தார். அதன் பின்னர் அவரது நடவடிக்கைகள் முழுவதையுமே அவள் தொடர்பு படுத்தியுணர்ந்திருந்தாள்.

இவ் வேண்டுகோள் வந்ததும் அர்த்த புஸ்டியுடன் அந்தப் பெண்.... புலனாய்வாளரின் கண்களை நோக்கினாள். அவர் அவளது பார்வையிற் தொக்கி நிற்கும் கேள்வியைப் புரிந்துகொண்டார். பதிலளிக்கும் முகமாக மெதுவாக தலையை ஆட்டினார். அந்தச் சைகை அவர்கள் அந்தப் பெண்ணுடன் தனிப்பட்ட முறையில் எதனையோ விசாரிக்க விரும்புவதை அவளுக்கு உணர்த்தியது.

தனது மடியில் மிருகங்கள் இரண்டை வைத்து விளையாடிக்கொண்டிருந்த குழந்தையை மிருதுவாக தனது தகப்பனின் மடிக்கு மாற்றினாள் அவள்... விசைக்கு இயங்கும் பொம்மையாக சமையலறைக்குச் சென்ற அவள் இரண்டு கண்ணாடிக் குவளைகளில் நீரைமொண்டு கொண்டு அந்த அறைக்குச் சென்றாள்.

" நன்றி அம்மணி"

அவர்கள் கண்ணாடிக் குவளைகளை கையிலேந்திய வண்ணம் மெதுவாக அவளிடம் பேச்சை ஆரம்பித்தனர்.

" இந்த அறைக்குள் வருவதில்லையா நீங்கள்...?"

"மிகக் குறைவு.. சுத்தம் செய்வதற்காக மட்டும் நான் இங்கு வருவேன்.. மற்றும்படி வந்தால் அவர் என்னுடன் பாய்வார்"

"ஆம்... நீங்கள் இந்த அறைக்குள் வருவதில்லை என்றுதான் அலிக வும் சொன்னார்"

தூண்டில் அவளை நோக்கி வீசப்பட்டது.

அதை அவள் உணரவில்லை... ஆனால் கணணியின் வன்தட்டு அகற்றப்பட்டிருப்பதை அவள் கண்டாள்....

" இந்த அறையில் ஒரேயொரு பொருளை மட்டுமே ஒளித்து வைத்திருப்பதாக அவர் சொன்னார்... ஆனாலும் நாம் மேலதிகமாக கணணியின் வன்தட்டையும் எம்முடன் எடுத்துச் செல்கின்றோம்"

தூண்டிலில் இரையையும் கொழுவியாகி விட்டது..... மீன் கௌவ வேண்டியது மட்டுமே எஞ்சியிருந்தது....

" அவர் சொன்ன படி அவர் ஒளித்து வைத்திருந்த பொருள் இதுதான்" என்று கூறியபடி இந்தப் பொலித்தீன் பையை விலக்கி கத்தியை இரத்தக் கறைகளுடன் அவர் அவளுக்குக் காட்டினார்....

மீன் இரையைக் கௌவிக் கொண்டது....

அவளது கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது.....

"எங்களுடைய விசாரணையில் அவர் அனைத்தையும் சொல்லிவிட்டார்.... உங்களிடம் அவரது மடிக்கணணி இருப்பதையும் அவர் சொன்னார்...."

கௌவிய இரை மீனின் தொண்டைக்குள் ஆழமாக இறங்க.... தூண்டிலின் முள் மீனின் தொண்டையைப் பதம் பார்த்தது. வலி உடலெங்கும் பரவ அந்த மீன் துடிக்கத் தொடங்கியது......

அவள் மெதுவாகத் திரும்பி தனது அறை நோக்கி நடந்தாள்.... அங்கிருந்து சொனி வகை மடிக்கணணியை அவள் காவிவந்தாள்......

புலனாய்வாளர்கள் இருவரும் ஆசுவாசமாக தாம் அருந்தி முடித்த கண்ணாடிக் குவளைகளில் தங்களது முகங்களைப் பார்த்துக் கொண்டார்கள்.

அந்தக் கணணி உடனடியாக உயிரூட்டப்பட்டது.... எனினும் இயக்குமுறைமை ஓடி முடிந்த பின்னர் கணணித்திரையில் கேள்வியொன்று எழுந்தது.... அதைப் பார்த்தவுடன் புலனாய்வாளாகளின் முகத்தில் ஒரு சலனக் கோடு ஓடி மறைந்தது.

அக் கணணித்திரையில் கடவுச் சொல்லைத் தரும்படி அந்தக் கேள்வி எழுந்திருந்தது....

"உனக்கு ஞாபகம் இருக்கின்றதா தோழனே? அலிக சொன்ன கடவுச் சொல்"

உடனடியாகவே இறுக்கத்தைத் தளர்த்தப் புலனாய்வாளர் கேள்வியொன்றை ........... (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண இலங்கை ஆசிரியர் சங்க செயலாளரினால் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு

## மாகாணக்கல்வித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட வெளிவாரி மதிப்பீட்டின் போது அதிபர், ஆசிரியர்களிற்கு இழைக்கப்பட்ட அவமதிப்பு.

கடந்த 06.05.2014, செவ்வாய்க்கிழமையன்று, தி/ ஸ்ரீ மாதுமை அம்பாள் வித்தியாலயத்திற்கு, மாகாணக்கல்வித் திணைக்களத்தால், வெளிவாரி மதிப்பீட்டிற்காக, மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் தலைமையில், குழுவொன்று விஜயம் செய்திருந்தது. இக்குழுவுடன் வருகைதந்த சாரதியால் சில விரும்பத்தகாத செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதாவது இக்குழுவில் அங்கம் வகிக்காத ஒரு சாரதி நேரடியாக வகுப்புக்களுக்குச் சென்று, ஆவணங்களைப் பரிசோதித்துள்ளார். அத்துடன் சில ஆசிரியர்களுடன் விரும்பத்தகாத முறையில், அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களிலும் ஈடுபட்டுள்ளார். மேலும், இப்பாடசாலையின் உயர் வகுப்பு மாணவி ஒருவர் தொடர்பான முறைப்பாடு ஒன்று, மாகாணக்கல்வித் திணைக்களத்திற்குக் கிடைத்துள்ளதாகவும், அம்மாணவியைத் தனக்குக் காண்பிக்குமாறும், சில ஆசிரியர்களை நிர்பந்தித்துள்ளார்.

அத்தோடு, நிறுவனத் தலைவரின் (அதிபர்) அனுமதியைப் பெறாமல் வகுப்பறைகளுக்குச் சென்று பார்வையிட்டது மட்டுமல்லாமல், அக்குறை நிறைகளை நேரடியாக அதிபருடனும் வாதிட்டுள்ளார். இச்செயலானது அதிபர், ஆசிரியர்களையும், அவர்களது பதவிக்குண்டான மரியாதையினையும் மட்டந்தட்டுகின்ற செயலாகவே அமைகின்றது.

பாடசாலை ஒன்றிற்கான, வெளிவாரி மதிப்பீட்டிற்கு, மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் தலைமையில் விஜயம் செய்த குழுவுடன் இணைந்து கல்விசாரா ஊழியரான சாரதி ஒருவர், மதிப்பீடு செய்தது, மாகாணக்கல்விப் பணிமனையில், போதிய ஆளணிக்குப் பஞ்சமோ என்ற ஐயப்பாடும் கல்விச்சமூகத்தின் மத்தியில் எழுந்துள்ளது. போதியளவு ஆளணியினர் காணப்படுகின்ற நிலையிலும், வெளிவாரி மதிப்பீட்டின் போது, இவரை இணைத்துக்கொண்டமை கல்விச்சமூகத்தை இழிவு படுத்தும் செயலாகவே நான் கருதுகின்றேன்.

இதில் வெட்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், இலங்கைக் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த ஒரு அதிகாரியே இச்சாரதியைத் தன்னுடன் வகுப்பறைகளுக்கு அழைத்துச் சென்றுள்ளார். தன்னுடன் அழைத்துச் சென்றதோடு நின்றுவிடாது, அவரை வகுப்பறையைப் பார்வையிடவும், மாணவர்களை, அதிலும் குறிப்பாக உயர்தர வகுப்பு மாணவர்களை விசாரிக்கவும், ஆசிரியர்களைக் கேள்வி கேட்கவும், வகுப்பறை ஆவணங்களைப் பரிசீலித்து, அது தொடர்பாக விசாரிக்கவும் அனுமதி வழங்கியுள்ளார். இச்செயலானது, இலங்கைக் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த ஒரு அதிகாரியின் அனுமதியின் பேரில், அவரது பூரண அனுமதியுடனும், ஒத்துழைப்புடனும், அவரது நேரடிக் கண்பார்வையில் இடம்பெற்றுள்ளது என்பது வேதனைக்குரியதே.

இச்செயல் மூலம், இலங்கைக் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த ஒரு அதிகாரி, தன் பதவியைத் துஷ்பிரயோகம் செய்தது மட்டுமல்லாது, தன் கீழ் உள்ள ஊழியரைத் தன் கடமைக்கும் மாறாகத் தவறான வழியிலே, வழிநடத்தியுமுள்ளார்.

இவரது கவனக்குறைவினாலும், தன் கடமையை சரிவரச் செய்யத்தவறியதாலுமே கடந்த 06.05.2014, செவ்வாய்க்கிழமையன்று, தி/ ஸ்ரீ மாதுமை அம்பாள் வித்தியாலயத்தின் மாணவர்கள் உட்பட அதிபரும் ஆசிரியர்களும் மனவுழைச்சலுக்குள்ளாகியுள்ளனர். எனவே இதன் விழைவை Negligence of Duty யாகக்கருதி, இலங்கைக் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த, மேற்குறிப்பிடப்பட்ட இவ் அதிகாரியே பொறுப்பேற்கவேண்டும்.

மேலும், இச்செயற்பாடானது ஒரு திட்டமிடப்பட்ட செயலா? அல்லது தற்செயலாக இடம்பெற்ற ஒரு செயலா? எது எவ்வாறாக இருப்பினும், இவ் வெளிவாரி மதிப்பீட்டினை ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாடாகக்கருத முடியாது. "குட்டு வாங்கினாலும் மோதிர விரலால் குட்டு வாங்க வேண்டும்" என்று சமூகம் எதிர் பார்க்கின்ற நிலையில், மாணவ சமூகத்திற்கான ஏணிப்படிகளாக விளங்குகின்ற ஆசிரிய சமூகத்தை அவமதிக்கின்ற செயற்பாடாகும். வெளிவாரி மதிப்பீடொன்றின் போது, வரைமுறையின்றி எவரும் கேள்வி கேட்கலாம்... எவரும் அவமதிக்கலாம் என்று எண்ணும் அளவிற்கு..... ஆசிரிய சமூகம் ஒன்றும் கிள்ளுக்கீரையல்ல.

எதிர்காலத்தில், மேற்குறிப்பிட்டது போல, பதவி வகிக்கும் அதிகாரிகளின், இத்தகைய முறையற்ற செயற்பாடுகள் தொடருமாகவிருந்தால், கிழக்குமாகாணத்தின் ஆசிரிய சமூகத்தை ஒன்று சேர்த்து, இவ்வாறான செயற்பாடுகளைத் தடுப்பதற்கான தொழிற்சங்க நடவடிக்கையினை முன்னெடுக்கவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாணக்கிளை தயங்கமாட்டோம் என்பதனையும் கூறிக்கொள்கின்றேன்.

(ஒப்பம். கிழக்கு மாகாணச் செயலாளர்)

## செய்தித் துளிகள்

### விபத்தடைந்த சிறுமியின் நிலை கவலைக்கிடம்

கடந்த 09ம் திகதி திருகோணமலை ஹபரணை வீதியில் முச்சக்கரவண்டியொன்று கல்பொத்த என்ற இடத்தில் விபத்தடைந்துள்ளது.

அதிகாலை 5 மணியளவில் நடைபெற்ற இவ்விபத்தில் ஒரே குடம்பத்தைச் சேர்ந்த ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

அதிவேகத்தால் கட்டுப்பாட்டையிழந்தே முச்சக்கரவண்டி விபத்தடைந்துள்ளது. காயமடைந்தவர்கள் உடனடியாக கந்தளாய் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப் பட்டனர்.

இவ்விபத்தில் படுகாயமடைந்த சிறுமியின் நிலை கவலைக்கிடமானதையடுத்து அவர் கண்டி வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

### கைலேஸ்வராவில் சிறுவர் தினம்

உலக சிறுவர் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தி/நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரியின் வர்த்தக மன்றத்தின் ஏற்பாட்டில் மேற்படி தினம் தொடர்பான நிகழ்வுகள் 30.04.2014 அன்று விழா மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு குச்சவெளி பிரதேச சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்து சிறுவர் தொழிலாளர் தொடர்பான விளக்கவுரையாற்றினார் அத்துடன் சிறுவர்களுக்கான விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன.




### ஆசியா பவுண்டேசன் உதவி

-எம்.ரீ.எம்.பர்ஹான்-

ஆசியாப் பவுன்டேசனால் அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து நூலகத்திற்கும் க.பொ.த சதாரன மற்றும் உயர்தர 10 வருட பரீட்சை வினாவிடைப்புத்தகம் வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை அமீர் அலி பொது நூலகத்தில் இன்று இடம் பெற்றது.

இந் நிகழ்வு ஆசியா பவுன்டேசன் பணிப்பாளர் திரு. அன்டன் நல்லதம்பி தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச சபை கௌரவ தவிசாளர் அல்ஹாஜ் ஏ. எம். எம். நௌசாட் அவர்கள் கலந்து கொண்டார்.

# குறுக்கெழுத்து புதிர் 008

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 17 | ■ | 2 | | | க | 18 |
| | ■ | 3 | 19 | | | | | |
| லா | | 4 | | 5 | 20 | ■ | ■ | |
| | ■ | | | | | | | 6 |
| 7 | 8 | | டி | 9 | பா | | | |
| 10 | 21 | | 11 | | | | | |
| | 12 | 22 | 13 | | | 14 | | 23 |
| | | | ■ | 15 | | | ■ | |
| ளி | | | ■ | | ■ | 16 பு | | |

**போட்டி முடிவுத் திகதி : 15.05.2014**

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிட்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 250, ரூபா 150, ரூபா 100 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :
மலைமுரசு. இல – 159ஏ,
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

### இடமிருந்து வலமாக

1. இது இருந்தால் மட்டுமே செலவு செய்ய முடியும்
2. தமிழர் வரவேற்கும் போது கூறும் சொல்
3. இந்தியாவில் மாநிலங்களிடையே விளையாடப்படும் துடுப்பாட்டம் - குழம்பியுள்ளது
4. தவம் இருப்பவர்
5. பாவம் தீர்க்கப்போகும் புண்ணியத் தலம் - வலமிருந்து இடமாக உள்ளது
6. பரத நாட்டியத்திற்கு ஒத்த சொல் - வலமாக இடமிருந்து
7. பார்வைக்குத் தேவையானது
8. சுருங்குதல் அழகு -குழம்பியுள்ளது
9. படை நடுங்கும் -குழம்பியுள்ளது
10. இதனைச் செய்பவர் தியாகி -குழம்பியுள்ளது
11. வடக்கின் தலைநகரம்
12. சிறுவரைக்குறிக்கும் சொல்
13. மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்று - வலமிருந்து இடமாக உள்ளது
14. 'ராடர்'ன் தமிழ்ச் சொல்
15. வனத்தின் ஒத்தசொல்
16. ........ பெயர்ந்த தமிழர்கள்

### மேலிருந்து கீழாக

1. முன்னைய காலங்களை கற்கும் பாடம்
2. பழிவாங்கும் உணர்வு
6. உறுதிக்கு ஒத்த சொல்
7. வெருகலுக்கு அடுத்துள்ள மட்டக்களப்பின் பிரதேசம்
14. தானிய வகையொன்று
15. கேட்பதற்கு பயன்படும் உறுப்பு
17. கட்டளைக்கு ஒத்த சொல் - கீழிருந்து மேலாக உள்ளது
18. திரவத்திற்கு எதிரான பதார்தத்தம் - கீழிருந்து மேலாக உள்ளது
19. சிவனுக்கு அடிமையானவர்
20. இசையமைப்பாளர் தேவாவிற்குப் பெருமை சேர்த்த பாட்டு
21. மண்டையோட்டை இப்படி அழைக்கலாம்
22. காவல்துறையின் கையிலுள்ள தடி
23. இதனைச் சிவன் கழுத்தில் நிறுத்தினார்

### குறுக்கெழுத்து புதிர் 007 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 க | ன | வு | ■ | 2 க | ர | ந் | 17 த | 18 டி |
| ல் | ■ | ■ | 3 கொ | ற் | ற | வை | டு | 4 கு |
| ■ | 5 லை | 19 றா | ற் | 6 கா | 20 ம் | பு | ப் | 7 கா |
| 21 அ | க் | ல் | அ | 8 ல | கு | 9 வி | பு | ர |
| ர் | 22 கா | கு | ப | ம் | ம் | ண் | ■ | ன் |
| ச் | ம் | 10 ழி | 23 க | 11 ண் | டு | 24 க | க் | 25 க |
| ன் | ல | 12 பா | ல் | ■ | 13 ப | லெ | 26 க | ணி |
| 14 சு | ப | ல | ம் | ன | ன் | க | வி | த |
| ன | 15 ர | ம் | 16 பா | ப | ன் | ம் | தை | ம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

01. குறித்த இடத்தை சென்றடைய அதிக நேரம் எடுத்த வாகனம் எது?
1. வேன் 2. பேருந்து 3.கார்

02. இன்று செவ்வாய்க் கிழமை. நாளை மறுதினம் 30ஆம் திகதியாகும். சென்ற சனிக்கிழமை அனுலா தனது 10 வது பிறந்த தினத்தை கொண்டாடியதாக நேற்று கூறினாள். அனுலா தனது பிறந்த தினத்தை கொண்டாடிய திகதி என்ன?
1. 24 2. 25 3. 26

03. 100கிராம் உடைய 20 தேயிலைப் பைக்கற்றுக்களின் நிறை யாது?
1. 200கிராம் 2. 2கி.கி 3. 20000கிராம்

04. 6 எனும் இலக்கத்தை உரோம எண்ணில் எழுத தேவையான தீக்குச்சிகளின் எண்ணிக்கை?
1. 6 2. 3 3. 4

05. 1/4+2/8 இன் தவறான விடை யாது?
1. 3/12 2. 4/8 3. 2/4

06. "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்பதன் கருத்து?
1. அடிக்க அடிக்க உடையும்
2. விடாமுயற்சி வெற்றி தரும்
3. அடிக்கும் போது அம்மி நகரும்

07. சித்திரை : மாதம் எனின் செவ்வாய் : ____________
1. வாரம் 2. மாதம் 3. நாள்

08. இன்று சனிக்கிழமை எனின் நாளை மறுதினத்திற்கு மறுநாள் என்ன கிழமையாகும்?
1. திங்கள் 2. செவ்வாய் 3. புதன்

09. வடக்குத் திசையை அறிய உதவும் உடுத்தொகுதி?
1. துருவ நட்சத்திரம் 2. தென் சிலுவை 3. விடிவெள்ளி

10. கீழ் உள்ள உபகரணங்களில் மேசன் பயன்படுத்தும் உபகரணங்கள் முறையே
1. சுத்தியல், அலவாங்கு, மண்வெட்டி, அத்தாங்கு
2. மணியாசு, நீர்மட்டம், தூக்குக்குண்டு, மேசன்கரண்டி
3. மண்வெட்டி, குறடு, சாவி, அத்தாங்கு

11. கையில் ஒட்டிய பாலக்காய் பாலை அகற்ற சிறந்த பொருள்
1. சவற்காரம் 2. வெந்நீர் 3. எண்ணெய்

12. களனி கங்கை கடலுடன் கலக்கும் இடத்திற்கு அண்மையில் உள்ள நகரம்
1. திருக்கோணமலை 2. கொழும்பு 3. களுத்துறை

13. மின்சாரத்தை சிக்கனமாகப் பாவிக்க நாம் பயன்படுத்தக் கூடிய மின்குமிழ்
1. புளோர் ஒளிர் மின்குமிழ் 2. நிப்போன் மின்குமிழ் 3. மெக்குரி மின்குமிழ்

14. மிருகங்கள் கடிப்பதனால் உண்டாகும் நோய்களுக்கு காரணமாக அமைவது.
1. கடிக்கும் போது உமிழ் நீரிலுள்ள கிருமிகள் உட்செல்லுதல்
2. தெள்ளுகள் உட்செல்வதால் உண்டாதல்
3. மிருகங்களின் சுவாசம் எமது உடலில் படுவதனால்.

15, 16 ம் வினாக்களுக்கு கீழ்வரும் அட்டவணையிலிருந்து விடையளிக்குக.
குறித்த ஓர் இடத்திலிருந்து வாகனங்கள் புறப்பட்ட நேரமும் குறித்த இலக்கிற்கு அவை சென்றடைந்த நேரமும் தரப்பட்டுள்ளன.

| வாகனங்கள் | புறப்பட்ட நேரம் | சென்றடைந்த நேரம் |
|---|---|---|
| கார் | மு.ப 07.00 | பி.ப 02.30 |
| மோ. சைக்கிள் | மு.ப 11.00 | பி.ப 0545 |
| வேன் | பி.ப 01..30 | பி.ப 07.45 |
| பேருந்து | மு.ப 0500 | பி.ப 01.00 |

15. குறித்த இடத்திற்கு விரைவாகச் சென்றடைந்த வாகனம் எது?
1. கார் 2. மோ. சைக்கிள் 3. வேன்

16. வாகனங்கள் சென்றடைந்த ஒழுங்கு முறையைக் காட்டும் ஒழுங்கு எது?
1. கார், மோ.சைக்கிள், வேன், பேருந்து
2. பேருந்து, கார், மோ.சைக்கிள், வேன்
3. வேன், மோ.சைக்கிள், கார், பேருந்து

17. ஒருவர் 3மீ 45செ.மீ துணியும் இன்னொருவர் 5மீ 75 செ.மீ துணியும் வாங்கினர் எனின், கடையில் வெட்டப்பட்ட மொத்தத் துணியின் அளவு யாது?
1. 9மீ 20 செ.மீ 2. 8மீ 120 செ.மீ 3. 9மீ 15 செ.மீ

18. பத்து பத்து ரூபா நாணயங்களின் பெறுமதி எவ்வளவு?
1. ரூபா 100 2. ரூபா 20 3. ரூபா 200

19. ஐந்நூறு ரூபாயில் எத்தனை ஐம்பது ரூபாய்கள் உண்டு?
1. 10 2. 20 3. 5

20. முப்பதாயிரத்து எழுநூற்று ஒன்பது, என்பதைக் குறிப்பது?
1. 30,790 2. 37,009 3. 30,709



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

## தன் வினை தன்னைச் சுடும்

குட்டிக் கதை

ஒரு நாள் ஒருவன் அவன் வீட்டுப் பரணைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். அப்போது அதுவரை அவன் கவனித்திராத ஒரு புத்தகத்தைக் கண்டெடுத்தான். அது ஒரு மிகப் பழைய புத்தகம். பக்கங்களைத் திருப்புகையில் மிகக் கவனம் தேவையிருந்தது.

அவன் அந்தப் புத்தகம் மந்திர மாயங்களைப் பற்றியது என்று அறிந்து கொண்டான். எத்தனையோ முறை படிக்க முயன்றும் அவன் ஒரே ஒரு பத்தியில் உள்ள கருத்தை மட்டும் தெரிந்து கொள்ள முடிந்தது. மற்றவை அவனுக்குப் புரியவில்லை.

அந்தப் பத்தியில் கருங்கடற் கரையில் கிடக்கும் மாய சக்தி மிக்க ஒரு கறுப்புக் கூழாங்கல்லைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்தது. அந்தக் கல்லால் எதைத் தொட்டாலும் அதைத் தங்கமாக மாற்றி விடுமாம். அந்தக் கல்லை எப்படிக் கண்டு கொள்வது என்றும் அந்தப் புத்தகத்தில் சொல்லப் பட்டிருந்தது. தொட்டுப் பார்த்தால் மற்ற கற்கள் எல்லாம் பனிக் கட்டி போல் குளிராய் இருக்க, அந்தக் கல் மட்டும் வெதுவெதுப்பாய் இருக்குமாம்.



இதைத் தெரிந்து கொண்ட மனிதனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கருங்கடல் கரை நோக்கி உடனே புறப்பட்டான்.

அங்கு தினமும் காலையிலிருந்து மாலை வரை அவன் ஒவ்வொரு கல்லாய் தொட்டுப் பார்த்துத் தேடத் துவங்கினான். கடற்கரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கருங்கூழாங்கற்கள் கிடந்தன. அவனுக்கு ஒரு முறை சோதித்த கல்லை மறுபடி மறுபடி சோதிக்காமல் இருக்க வேண்டுமே என்ற கவலை வந்து விட்டது. சோதித்த கல்லைக் கடலுக்குள் உடனே எறிந்து விட்டால் குழப்பம் வராது என்று யோசித்து, அதன்படியே ஒவ்வொன்றாகக் கற்களைக் கடலுக்குள் எறிந்தான்.

கற்களைத் தொட்டுப் பார்த்து கடலுக்குள் எறியும் பணி அவனுக்கு அனிச்சைச் செயல் போல் ஆகி விட்டது.

ஒரு நாள் மாலை, மிகுந்த தேடலுக்குப் பிறகு களைத்துப் போய் கடற்கரையை விட்டுச் செல்லும் போது ஒரு கறுப்புக் கூழாங்கல் அவன் கண்ணில் பட்டது. அதைக் கையில் எடுத்தான். அது வெதுவெதுப்பாய் இருந்தது. ஆனால், பல வருடப் பழக்கத்தால், எப்பொழுதும் போல் அதையும் யோசிக்குமுன் கடலில் தூர எறிந்து விட்டான்.

**செய்யும் செயல்களில் எப்பொழுதும் கருத்தும் கவனமும் தேவை. பழக்கங்களுக்கு அடிமையாவதைத் தவிர்க்க வேண்டும்.**

## சிறுவர் முரசு



### சிந்திக்க .. ..

**வெற்றிக்கும் தோல்விக்கும் சிறு வித்தியாசம் தான்**
**கடமையை செய்தால் வெற்றி**
**கடமைக்கு செய்தால் தோல்வி**

### பழக்கவேண்டும்!

நல்லதைப் பழகு வீரேல்
நன்மைகள் கிடைத்தே தீரும்!
வல்லவர் ஆகுவீர்கள்,
வாழ்த்துவார் பெரியவர்கள்!

கேட்டதைப் பழகுவீரேல்
கிடைப்பது தீமையாகும்!
பட்டிடும் பாடு நல்ல
பயன்களைத் தந்திடாதே!

மூத்தவர் சொல்லைக் கேட்டு
முறைப்படி வாழ வேண்டும்!
காத்த தாய் - தந்தையாரைக்
காத்திட வேண்டும் பின்னாள்!

பள்ளியில் கற்பித்தார்க்குப்
பணிவுடன் நடக்க வேண்டும்!
பிள்ளைகளோடு சண்டை
பிடியாமல் படிக்கவேண்டும்!



### திறமையுள்ள குழந்தைகள்



'என் குழந்தை படிப்பில் சுட்டி, விளையாட்டிலும் படுசுட்டி.' என்று பெற்றோர்கள் பக்கத்து வீட்டுக்காரர்களிடம் சொல்லி பெருமைப்படுவது உண்டு. தன் குழந்தையிடம் என்ன திறமையிருக்கிறது என்று தெரியாமலே புலம்பி, குழம்பிகிறவர்களும் உண்டு.

திறமை எல்லோரிடமும் இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட துறையில் இந்த திறமை அதிகமாக இருக்கும். அது எந்த துறை என்பதை உணர்ந்து தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். அதன்பின்பு அதை வளர்ப்பதற்கு என்னென்ன வழிமுறைகளைப் பின்பற்றுவது என்று யோசிக்க வேண்டும். அதற்கு நாம் அந்த துறையைப் பற்றிய தகவல்களை விரல்நுனியில் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் உங்கள் குழந்தைகள் விரும்பிய துறையில் ஜொலிக்க முடியும்.

குழந்தைகளிடம் இருக்கும் திறமையை எப்படி கண்டு பிடிப்பது?

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. கோடாத தாயக்கட்டை ஒன்றின் முகங்கள் 1, 2, 2, 2, 3, 3 என இலக்கமிடப்பட்டுள்ளது. இத் தாயக்கட்டையை இருமுறை உருட்டும் போது பெறப்படும் நிகழ்ச்சிகளின் மாதிரிவெளியை தெக்காட்டின் தளத்தில் குறித்துக் காட்டுக.

பின்வரும் நிகழ்ச்சிகளுக்கான நிகழ்தகவைக் காண்க.
1. இரு முறைகளிலும் ஈட்டுக்களின் கூட்டுத்தொகை முதன்மை எண்ணாக இருத்தல்.
2. இரு முறைகளிலும் ஈட்டுக்களின் கூட்டுத்தொகை சதுர எண்ணாக இருத்தல்.
3. இரு முறைகளிலும் ஒரே எண்ணாக இருத்தல்.

02. ஒரு செவ்வகத்தின் பரப்பளவு $150cm^2$. நீளத்தை 3 மீற்றரினால் குறைத்தும் அகலத்தை 2 மீற்றரினால் கூட்டிய போது செவ்வகம் சதுரமானது. செவ்வகத்தின் நீள அகலங்களை $x, y$ எனக் கொண்டு

அ. $x, y$ என்பவற்றைக் காண்க.

ஆ. சதுரத்தின் பரப்பளவிற்கும் செவ்வகத்தின் பரப்பளவிற்கும் இடையிலான விகிதத்தைக் காண்க.

03. ஜதின்ஜா நிறுவனத்தில் இருந்து ரூபா 285000 ஐ 20வீத ஆண்டு வட்டியில் 30 சம மாதாந்தக் கட்டணங்களில் செலுத்த வேண்டும்.

1. ஒரு மாதத்தில் செலுத்தப்படும் பணம் எவ்வளவு?
2. ஒரு மாத கடன் பணத்துக்கான வட்டி எவ்வளவு?
3. மாத அலகுகளின் எண்ணிக்கை எவ்வளவு?
4. மொத்த வட்டித் தொகையைக் காண்க.

04. 70m விட்டமும் 1m உயரமும் உடைய உருளை வடிவ நீர்த்தாங்கி ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது.

அ. உருளையின் அடி வட்டத்தின் ஆரை யாது?
ஆ. வட்டக் குறுக்கு வெட்டுத் தோற்றத்தின் பரப்பளவு யாது?
இ. தாங்கியின் கொள்ளளவை இல் தருக.
ஈ. 7cm, 14 cm விட்டமுடைய என்னும் இரு நீர்ப்பம்பிகள் முறையே A, B எனும் இரு நீர்ப்பம்பிகள் 20 m/s, 5m/s வேகங்களில் தாங்கியினுள் நீரைப் பாய்ச்சுகின்றது. தாங்கியை முற்றாக நீரால் நிரப்புவதற்கு எடுக்கும் நேரத்தைக் காண்க.

05. தற்போது தந்தையினதும் மகனினதும் வயதுகளிற்கிடையிலான விகிதம் 4:1 ஆகும். 6 வருடங்களுக்கு முன்னர் தந்தையினதும், மகனினதும் வயதுகளுக்கிடையிலான விகிதம் 7:1 ஆகும். தற்போது மகனின் வயது t வருடங்கள் எனின்,

அ. தற்போது தந்தையின் வயதை சார்பில் தருக.
ஆ. 6 வருடங்களுக்கு முன்னர் தந்தையினதும் மகனினதும் வயதுகளுக்கிடையிலான விகிதத்தை சார்பில் தருக.
இ. விகிதசமன் தொடர்பை எழுதுவதன் மூலம் தந்தையினதும் மகனினதும் தற்போதைய வயதுகளைக் காண்க?
ஈ. இன்னும் வருடங்களில் தந்தையின் வயது மகனின் வயதின் இரு மடங்காகும் எனின், இல் ஓர் சமன்பாட்டை அமைத்து ஐக் காண்க.

**கணிதம் வழிகாட்டல் :**
**திருமலையின் பிரபல ஆசிரியர்**

**MATHS**
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
**T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
G.C.E (O/L) பிரதி சனி தோறும்
பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## பாடம் : விஞ்ஞானம்

01. கீழ்வருவனவற்றில் பிழையான கூற்று எது?
1. 1ம் கூட்ட மூலகங்களை விட 2ம் கூட்ட மூலகங்களின் உலோக இயல்பு குறைவு
2. ஐ விட உலோக இயல்பு கூடியது.
3. கூட்டத்தின் வழியே செல்லும் போது அணுவாரை அதிகரிப்பதால் சேர்வைகளை உருவாக்கும் திறன் அதிகம்.
4. ஆவர்த்தனம் வழியே கருக்கவர்ச்சி விசை குறைவடையும்

02. மின் பகுப்பில் முலாமிடப்படும் உலோகத்தின் நிறையானது செலுத்தப்படும் மின்னோட்ட பருமனின் அளவிற்கும், செலுத்தப்படும் மின்னோட்ட நேர அளவிற்கும் நேர் விகிதசமனாகக் காணப்படும் என கண்டறிந்த விஞ்ஞானி யார்?
1. பெஞ்சமின் பிராங்கிளின் 2. அலெக்சாண்டர் வோல்ற்றா
3. மைக்கல் பரடே 4. ஜோர்ஜ் சைமன் ஓம்

03. ஒரு சோதனைக்குழாயில் சிறிதளவு நீரை இட்டு அதற்குள் தேங்காய் எண்ணெய் சிறிதளவு இட்டு எனும் இரசாயனப் பதார்த்தம் சேர்க்கப்பட்ட போது தேங்காயெண்ணெய் சிவப்பு நிறமாகக் காணப்பட்டது. இங்கு என்பது?
1. அயடீன் 2. பையுரேற்று கரைசல் 3. சூடான் கரைசல்
4. பெனடிக்கின் கரைசல்

04. காபனீரொட்சைட்டு வாயுவை தெளிந்த சுண்ணாம்பு நீரினுள் செலுத்தும் போது பால் நிறம் தோன்றுவதற்கும் பின்னர் பால்நிறம் மங்குவதற்கும் காரணமாக இரசாயனப் பதார்த்தங்கள் முறையே எவை?
1. கல்சியம் ஒட்சைட்டும், கல்சியம் காபனேற்றும்
2. கல்சியம் காபனேற்றும், கல்சியம் ஒட்சைட்டும்
3. கல்சியம் இருகாபனேற்றும், கல்சியம் காபனேற்றும்
4. கல்சியம் காபனேற்றும், கல்சியம் இருகாபனேற்றும்

05. மண்ணினுள் தரைக்கு சமாந்தரமாக வளரும் தண்டுகளில் உணவு சேமிக்கும் தாவரம் எது?
1. மஞ்சள் 2. உருளைக்கிழங்கு 3. வெங்காயம் 4. இன்னலக்கிழங்கு

06. ஒரு மின்கலனடுப்பில் வெப்பச்சுருளினது தடை 62.5 களாகும். இவ்வடுப்பு 250 வோல்ற்று மின்வழங்களுடன் 3 நிமிட நேரத்திற்கு தொடுக்கப்பட்டது. அதிலிருந்து விடுவிக்கப்படும் வெப்பத்தின் அளவைக் காண்க.
1. 12150 2. 30000 3. 180000 4. 720000

07. பற்றீரியா பற்றிய சரியான கூற்று அல்லது கூற்றுக்கள் எவை?
அ. திட்டமான கரு, கருமென்சவ்வு காணப்படாது
ஆ. முதலுருவைச் சூழ பெப்ரிடோ கிளைக்கலனாலான கலச்சுவர் உண்டு
இ. பிளவு மூலம் அல்லது துண்டாதல் மூலம் இனம்பெருகும்.
1. அ சரி 2. அ,ஆ சரி 3. அ,ஆ,இ சரி 4. ஆ,இ சரி

12. பின்வரும் தீயணை கருவிகள் தொடர்பாக பிழையானது?
1. நீர்த்தீயணை கருவி - கடதாசியில் ஏற்படும் தீயை கட்டுப்படுத்தும்
2. நுரை தீயணை கருவி - மரப்பலகையில் ஏற்படும் தீயை கட்டுப்படுத்தும்
3. ஏலோன் தீயணை கருவி - மின்னினால் ஏற்படும் தீயை கட்டுப்படுத்தும்
4. உலர் பொலித்தீயணை கருவி - மக்னீசியம், பொற்றாசியம் போன்ற உலோகங்களில் ஏற்படும் தீயை கட்டுப்படுத்தும்.

13. செறிவுடைய இன் 600 கரைசலின் செறிவை ஆக்குவதற்கு சேர்க்கவேண்டிய நீரின் அளவு? 1. 200 2. 300 3. 400 4. 600

14. உலோகம் ஒன்றின் அடர்த்தி 2400. அதன் கனவளவு ஆகும். இவ்வுலோகத்தின் அடர்த்தி கொண்ட திரவத்தினுள் முழுமையாக அமிழ்த்தும் போது தோற்ற நிறை யாது? 1. 2040 2. 2400 3. 4200 4. 3300

15. காபனிரு சல்பைட்டில் நன்கு கரையக்கூடியதும் மென் நீல நிறச் சுவாலையுடன் எரிய கூடியதும், சல்பூரிக்கமில தயாரிப்பிலும் பயன்படும் மூலகம் எது? 1. Mg 2. Na 3. P 4. S

## பாடம் : வரலாறு

- வரலாறு என்றால் என்ன?
  மனித செயற்பாடுகள் தொடர்பாக காரண காரிய அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டு ஒரு கால ஒழுங்கில் முன்னெடுத்துச் செல்லப்படும் உண்மைச்சம்பவ தொகுப்பு

- வரலாறு பற்றிய அறிஞர்களின் கூற்றுக்கள்?

நிகழ்காலமும் எதிர்காலமும் இறந்த காலத்திலிருந்து கட்டியெழுப்பப்படுவதால் அதனை மறந்து செயற்படுவது அத்திவாரமின்றி கட்டடம் கட்டுவதற்கு சமனாகும். – ஜவகர்லால் நேரு

நிகழ்காலத்தை விளங்கிக் கொள்வதற்கான திறவு கோலாக இறந்த காலத்தை கருதலாம் - நு.ர் கார்

புராதனகாலம் தொடக்கம் இன்றையகாலம் வரையில் மனிதகுலத்தின் கடந்தகாலத்தை கற்பதுதான்வரலாறு - ஸ்ருவர்ட் பிகொட்-

ஒரு யுகத்தில் எழுதிப் பாதுகாத்து வைக்குமளவுக்கு பெறுமதி மிக்க விடயங்களை அதற்கு முன்னைய யுகமொன்றிலிருந்து தேடிப்பெறல் - பேர்க்ஹாட

வரலாறு என்பது தனிப்பாடமல்ல எல்லா பாடங்களின் சேர்க்கை பல அறிவுத் துறைகள் கூடி வாழும் இல்லம் - பு.ஆ திரவிலியன்

- மகாவம்சத்தின் முதல் மன்னன் - விஜயன்
  இறுதி மன்னன் - மகாசேனன்

- பின்வரும் மூலாதாரம் வெளிப்படுத்தும் விடயங்கள்
  1. மகாபோதிவம்சம் - வெள்ளரசு கிளை வரலாறு
  2. தாட வம்சம் - தந்ததூதுவின் வரலாறு

- இலங்கையில் எழுத்துக் கலையை அறிமுகம் செய்தவர் யார்?
  மகிந்ததேரர்

- பின்வரும் சாசனங்கள் குறிப்பிடும் விடயங்களைத் தருக.
1. பனாகடுவ செப்புசாசனம் - (1ம் விஜயபாகுவின் – காணிகள் பகிர்ந்தளிப்பு
2. வல்லிபுர பொற்சாசனம் - (வசபனின்) யாழ்ப்பாணம் ஆட்சிபரம்பல்

- துட்டகைமுனுவின் 10 தளபதிகள் பற்றி மகாவம்சம் குறிப்பிடும் விடயங்களை உறுதிப்படுத்தும் கல்வெட்டுக்கள் எவை?
  சிதுல்பவ்வ
  சங்கபால விகாரை

- குறுநில மன்னர், பிரதேச ஆட்சியாளர் பற்றி குறிப்பிடும் கல்வெட்டுக்கள்
  குசேலன்கந்ந ஹென்னன்னேகல பம்பரகல யடஹலென

- ஆராமை நிர்வாகம் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள்
  மிகிந்தலை அபயகிரி சமஸ்கிருத
  களுதியபொகுண

ஆசிரியர் : அகிலன்



கடந்த வருடம் HISTORY ACADEMY யில் கல்வி கற்ற 77 மாணவர்களில் 58 மாணவர்கள் A பெறுபேற்றையும், 16 மாணவர்கள் B பெறுபேற்றையும், 03 மாணவர்கள் C பெறுபேற்றையும் பெற்றுத்தந்து எனது கல்வி நிலையத்துக்கு பெருமை சேர்த்தமைக்கு இம் மாணவச் செல்வங்களுக்கு எனது நன்றிகள்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெருகல் சுற்றிவளைப்பு....

கடமையாற்றும் வீரரொருவரின் மீது தாக்குதல் நடத்தியதுடன் ரி-56 ரக துப்பாக்கியை அவ்விடத்திலேயே போட்டுவிட்டு தப்பியோடிய மூவரை கைது செய்யும் நோக்கிலேயே தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று கடற்படை அறிவித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் பாதுகாப்பு ஊடகப் பேச்சாளரின் அறிக்கையின் படி இலங்கைத்துறை முகத்துவாரக் கடற்படை முகாமிலிருந்து சில மீற்றர் தூரத்தில் கடந்த 5ம் திகதி மாலை 6.30 மணியளவில் துள்ளள் பயிற்சி செய்துகொண்டிருந்த சிரேட்ட கடற்படை அலுவலர் ஒருவர் அருகாமையில் இரண்டு சந்தேகத்திற்கிடமான இளைஞர்கள் சுற்றப்பட்ட உரப்பையுடன் நகருவதை அவதானித்து அவர்களை அனுகி விசாரணை செய்ய முயன்றுள்ளார் என்றும் அதனையடுத்து அவர்கள் உரப்பையைப் போட்டுவிட்டு தப்பியோடிவிட்டதாகவும் அவ் உரப்பையினுள் ஒரு. ரி56 ரகத்துப்பாக்கியும் பலதடவைகள் சுடக்கூடிய ரவைகளும் இருந்ததாகவும் தெரிவித்துள்ளது.

அதனையடுத்தே சந்தேக நபர்களைத் தேடி கிராமங்களுக்குள் கடற்படை, இராணுவம் மற்றும் காவல்துறையினர் இணைந்த தேடுதல் வேட்டைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை அங்குள்ள மக்களின் கருத்துக்கள் முற்றிலும் மாறாக இருக்கின்றது. திட்டமிட்ட விதமாகவே இச் செயற்பாடு நடந்துள்ளது என அவர்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். இதேவேளை புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளியொருவர் கத்தி வெட்டுக்கு இலக்காகியிருப்பதாகவும் அவர்கள் தெரவித்தனர்.

## சம்பூர் காணிகளுக்கு...

இவ்விணையத்தில் வெளியிடப்பட்ட செய்தியின் படி

இடம்பெயர்ந்த மக்கள் இதனை ஏற்க மறுத்திருப்பதால் அரசாங்கம் புதிய நெருக்கடியை எதிர்கொண்டிருக்கின்றது.

இலங்கை அரசு, சம்பூரில் உயர் பாதுகாப்பு வலயத்துக்காக மேற்கொள்ளப்பட்ட நிலக்கையகப்படுத்தல் முயற்சியில் நிலமிழந்த மக்களுக்கு, இழப்பீடு வழங்க 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக இன்று புதன்கிழமை தெரிவித்திருக்கிறது. இலங்கை உச்சநீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு விசாரணையில் அரசு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

## த.தே.கூ வின் உருவாக்கத்திற்கு..

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

எமது தலைவர் அண்ணன் ஸ்ரீ சபாரெட்ணம் எமது இயக்கத்திற்கு சிறப்பான ஒரு தலைமைத்துவத்துடன் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தினை முன்னெடுத்துச் சென்றவர்.

ஒவ்வொரு டெலோ போராளிகளும் அந்த காலகட்டத்தில் அந்த சிந்தனையோடும் எண்ணங்களோடும் தான் அவரால் வளர்க்கப்பட்டவர்கள். ஆனால் இறுதியாக ஐந்து விடுதலை இயக்கங்கள் உருவாகி நாம் எங்களுக்குள் ஒற்றுமை இல்லாததன் காரணமாக ஒன்றாக இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக அனைத்து இயக்கங்களும் ஒன்றாக கூட்டுமுயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார். ஆனால் அந்த முயற்சி இன்றுவரை தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றது.

இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பாக அந்த ஒற்றுமை பரிணமித்தாலும் கூட நாம் இன்னும் இந்த ஒற்றுமைக்குள் வரவில்லை என்றுதான் கூற வேண்டும்.

எமது இயக்கம் ஆயுதக் கட்சிகளையும் மிதவாதக் கட்சிகளையும் ஒன்றிணைத்து தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்துடன் ஒன்றிணைந்து நடவடிக்கை முன்னெடுப்பதற்கு ஒற்றுமையை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொண்டது அதற்கு எமது ஊடகவியலாளர்கள் சிலரும் உறுதுணையாக இருந்தமை இங்கு குறிப்பிடப்படவேண்டிய விடயம் என்றார்

## இனி யாரையும்...

அண்மையில் சேருநுவர கல்வி வலயத்திற்குட்பட்ட ஆசிரியை ஒருவர் வழங்கிய செருப்பு மாலைத்தண்டனை பெரும் சர்ச்சையைக் கிளப்பியதுடன் அவர் தண்டனை இடமாற்றமும் பெற்றுள்ளார். தான் அளித்த தண்டனையால் அந்த வறிய குடும்பம் தற்போது நன்மைகளை அனுபவித்துவருவது தனக்கு பெரும் திருப்தியைத் தருகின்றது எனத் தெரிவித்துள்ள அவர் பல நாட்கள் அந்த மாணவியைத் தனது மோட்டார் சைக்கிளில் பாடசாலைக்கு அழைத்து வந்ததையும் அச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர்ந்தார்.

## பாடசாலைச் சிறுமி...

அனுப்பப்பட்டுள்ளார். மேலதிக சிகிச்சைகளுக்காக கண்டி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். அங்கும் சிகிச்சை பலனின்றி சிறுமி லதிகா 04.05.2014 அன்று காலை மரணத்தைத் தழுவியுள்ளார். 06.05.2014 காலை 11.00 மணியளவில் சிறுமியின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. வாகனத்தை ஓட்டி வந்த சாரதி கைத்தொலைபேசியில் உரையாடிக்கொண்டு வேகமாக வாகனத்தைச் செலுத்தி வந்தமையே விபத்து ஏற்படக் காரணம் என மக்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தனர்.

## நடவடிக்கை எடுப்பாரா...

நடத்தையில் ஈடுபட்டுள்ளார். கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் சாரதியாகச் செயற்பட்டுவரும் இவர் அத்தினத்தில் பாடசாலை மாணவர்களின் அப்பியாசக் கொப்பிகளைப் பார்வையிட்டதுடன் ஆசிரியர் பதிவேடுகளையும் பார்வையிட்டதாகவும் அதனை உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் அருகில் இருக்கவே மேற்கொண்டதாகவும் குறித்த பாடசாலையின் ஆசிரியர்களும் மாணவர்களும் தெரிவித்தனர்.

அத்துடன் இச்சாரதி பாடசாலைக்கு அன்று சமூகம் தராத மாணவி ஒருவரைக் கடுமையாக விசாரித்ததும் தெரியவந்துள்ளது. இதனையடுத்து கடந்த 6ம் திகதி மோலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் இவ்விடயத்தை அப்பாடசாலையிலிருந்து வருகை தந்த இரு ஆசிரியர்கள் முறையிட்டதாகவும் அதற்கு அவர் நடவடிக்கைகள் எதனையும் முன்மொழியாது மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு இவ்விடயத்தைத் தெரியப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்ததாகவும் தெரிகின்றது.

இதனைத் தொடர்ந்து குறித்த பாடசாலை ஆசிரியர்கள் இவ்விடயத்தை மாகாண மட்டத்தில் பொருத்தமுடைய அனைத்து அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்த முயற்சியெடுத்துள்ளனர்.

இவ்விடயத்தை அகில இலங்கை ஆசிரியர் சங்கத்திற்கும் அவர்கள் அறிவிக்கவுள்ளதாகவும் தெரிகின்றது. (விடயம் தொடர்பான இலங்கை ஆசிரியர் சங்க அறிவிப்பு 10ம் பக்கத்தில்)

## க.பொ.த.சாதாரண தரம்...

திருகோணமலை மாவட்டத்தில் 1ம் இடத்தையும் பெற்றுள்ளது. 67.25 வீதத்தினைப் பெற்றுக்கொண்ட திருக்கோவில் தேசிய மட்டத்தில் 33ம் இடத்தையும் கிழக்கில் 6வது இடத்தையும், அம்பாறை மாவட்டத்தில் 1ம் இடத்தையும் பெற்றுள்ளது.

திருகோணமலை வலயம் 65.45 வீதத்தினைப் பெற்று கிழக்கில் 7வது இடத்தையும் தேசிய மட்டத்தில் 34ம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது.

## திருகோணமலைப் புதைகுழி...

அதையடுத்து இவ்வாறு 1990ம் ஆண்டில் கைது செய்யப்பட்டு காணாமற் போனவர்களுடைய எச்சங்களாக இவை இருக்கலாம் என அவ்வாறு காணாமற்போயுள்ளோரின் பெற்றோர் அல்லது உறவினர்கள் சந்தேகப்படுமிடத்து மேல் நடவடிக்கை எடுப்பதற்கு நீதிமன்றத்தின் உதவியை நாட முடியும் என சட்ட வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனடிப்படையில் காணாமற்போனவரின் எச்சங்கள் அந்தப் புதைகுழியில் இருக்கலாம் என சந்தேகிக்கும் எவரும் அவ்விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதன் ஊடாக மேலதிக நடவடிக்கைகளை எடுக்கக் கோர முடியும் என அவர்கள் தெரிவித்தனர்.

திருகோணமலையில் இயங்கும் சட்ட உதவி அமைப்புகள் இவ்வகையான நடவடிக்கைகளுக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்கும் என்பதையும் அவர்கள் தெரிவித்தனர்.

## புற்றுநோய் மருத்துவமனை...

பணிப்பாளர் வைத்தியர் எம்.எஸ்.இப்றாலெப்பை தலைமையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் உதவிப் பணிப்பாளர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் உட்பட பொறியியலாளர்கள், சுகாதார அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் 07-05-2014 இன்று புதன்கிழமை காலை நேரில் சென்று பார்வையிட்டனர்.

இப் புற்று நோய் வைத்தியசாலை மட்டக்களப்பில் திறக்கபடுவதால் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணாமலை ஆகிய மாவட்ட மக்கள் பெரிதும் நன்மையடையவுள்ளனர்.

4 மாடிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுவரும் இப் புற்று நோய் வைத்தியசாலையில் வெளி நோயளர் சிகிச்சை பிரிவும், 80 பேர் தங்கி சிகிச்சை பெரும் விடுதி வசதியும், 10 பேர் தங்கி அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெரும் வசதியும் இதில் உள்ளதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் எம்.எஸ்.இப்றாலெப்பை தெரிவித்தார்.

இங்கு அமைக்கப்பட்டுவரும் புற்று நோய் வைத்தியசாலை இலங்கையில் மஹரகம, கண்டி, காலி, கராப்பிட்டிய, யாழ்ப்பாணம் போன்ற பல்வேறு வைத்திய சாலைகளில் அமையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தைகள் விடுதலை...

கடல்மைல் தொலைவில் றோலர் படகில் பயணித்துக் கொண்டிருந்த ஐம்பத்து நான்கு தமிழர்களை கிழக்குக் கடற்படையின் கடற்பாதுகாப்புக் கலமொன்று அவதானித்துக் கைது செய்திருந்தது.

கைதான அனைவரும் திருகோணமலைக் கடற்படைத்தளத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் அவர்கள் மேலதிக விசாரணைக்காகக் குற்றப்புலனாய்வு அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டிருந்தனர். விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்நிலைப்படுத்தப்பட்டவர்களை தடுப்பிலிட்ட நீதிபதி அவர்களிடையேயிருந்த பதின்மூன்று குழந்தைகளை திருகோணமலையிலுள்ள தபோவனத்தில் பாதுகாப்பாக வைத்திருக்கும்படி உத்தரவிட்டதைத் தொடர்ந்து அக்குழந்தைகள் தபோவனத்தின் பாதுகாப்பில் விடப்பட்டிருந்தனர்.

மீண்டும் கடந்த 7ம் திகதி விசாரணைக்கு வந்த அவ்வழக்கில் முப்பத்தைந்து பேரையும் சரீரப் பிணையில் விடுதலை செய்த நீதிபதி அவர்கள் சட்ட விரோதமாக பயணிப்பதற்கு உதவினார்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் நான்கு பேரை மட்டும் மேலும் பதின்நான்கு நாட்களுக்குத் தடுப்பில் இட்டுள்ளார்.

## குத்தகையில் முறைகேடு...

முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன். அரசாங்கத்தின் காணி வழங்கும் நடைமுறைகளை மீறிய இந்தகையை செயல்பாடுகளை தான் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளதாகவும் கூறுகின்றார்.

தனியார் முதலீட்டு நிறுவனங்களுக்கு காணிகள் வழங்கப்படும் வேளையில் பிரதேசத்திலுள்ள பொது அமைப்புக்களுடன் கலந்தாலோசித்து சமூகத்திற்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் . முன்மொழிவுகள் வழங்கப்பட்டு, அவை பிரதேச, காணிப் பயன்பாட்டுக் குழுவில் அனுமதிக்கப்பட்டு, மாவட்ட காணிப் பயன்பாட்டுக் குழுவின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டு, பின்னர் மேலதிக அனுமதிக்காக மாகாணசபைக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும் ஆனால் இந் நடைமுறை மீறப்பட்டு முன் அனுமதியுடன் வளம்மிக்க அரச காணிகள் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ள அரசாங்க அதிபர் பி. எஸ். எம். சார்ள்ஸ் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரால் தெரிவிக்கப்பட்டுள்ளது போல் முறைகேடுகள் எதுவும் இடம்பெறவில்லை என்றும், அரச காணி பயன்பாடு தொடர்பான விதி முறைகள் எதுவும் மீறப்படவில்லை என்றும் கூறுகிறார் என அச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது

## கிழக்கு பல்கலைக்கழக...

மாணவர்களின் விரிவுரைகளில் இருந்து கல்விகற்க அத்தனை மாணவர்களுக்கும் வைத்து எழுத கதிரைகள் இல்லை, செயன்முறை வகுப்புகள் ஒரே வகுப்பு மாணவர்களுக்கு இரண்டு அல்லது நான்கு பிரிவுகளாகவே பிரித்து கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றது.

இவற்றுக்கு மேலாக யுத்த கால கிழக்கு பல்கலைக்கழக நடைமுறைகளை போலவே தற்பொழுதும் மூன்று வருட கல்வி செயற்பாடுகள் நான்கு வருடங்களாகவும் நான்கு வருட கல்வி செயற்பாடுகள் ஐந்து வருடங்களாகவும் நடைபெறுகின்றது இவற்றிலே எங்கே கடந்த இரண்டு வருடங்களாக பல்கலைக்கழகத்தில் பாரிய அபிவிருத்தி நடைபெறுகிறது?

அரசாங்கம் பாரிய நிதியை வடக்கு கிழக்கு அபிவிருத்திக்காக ஒதுக்குகிறது. அத்துடன் கிழக்கு பல்கலைக்கழத்துக்காக கணிசமான நிதியை உயர்கல்வி அமைச்சு ஒதுக்கி உள்ளது. இதை எந்த உப வேந்தர் இருப்பினும் அரசாங்கம் செய்யும். இதில் எந்த ஒரு நிதியும் தற்போதைய உபவேந்தர் அவர்களால் வெளி இடங்களில் இருந்து கொண்டுவரப்படதில்லை அனைத்துமே அரசாங்கம் ஒதுக்கிய நிதி. இவ்வாறு இருக்க இந்த உபவேந்தர் வந்ததால்தான் பல்கலைக்கழகத்துக்கு கட்டிடங்களே வந்தது என்றும் இவர் இல்லை எனில் அபிவிருத்தியே இல்லை எனவும் பொது மக்களை நம்ப வைத்து தான் செய்யும் அதிகார து'ப்ரயோகங்களுக்கும் ஊழலுக்கும் அபிவிருத்தி எனும் சாயம் பூசுகிறார்.

இவற்றை தட்டி கேட்க போகும் அமைப்புக்கள் மற்றும் தனி நபர்களை அடியோடு வேரறுக்க நினைக்கிறார். முதலில் விரிவுரையாளர்கள் பழிவாங்கப்பட்டனர் பின்னர் ஊழியர்கள் தற்பொழுது தங்கள் உரிமையை கேட்கப்போன மாணவர்கள்.

அதிலும் மாணவர்களுக்கு கொடுக்கும் தண்டனைகளை பகிரங்கமாக அறிவித்த பின்னரே அவர் அதற்கு உரிய ஒழுக்காற்று குழுவை கூட்டுகிறார் அதற்கு தற்போதைய உதாரணம் அவரை தாக்கியதாக பழி சுமத்தி விட்டு குறித்த மாணவரின் மாணவர் பதிவை ரத்து செய்து காட்டுகிறேன் என்று பகிரங்கமாக கூறி இருப்பதானது தனி மனித பழிவாங்கல் மற்றும் அதிகார துஸ்பிரயோகத்தின் இறுதி வடிவமாகும். என அக்குற்றச்சாட்டு அறிக்கை தொடர்கின்றது.




# பெண்ணினமே!!

உங்கள் மனைவிக்கு நல்ல கணவனாக இருக்க இதோ சில டிப்ஸ்

ஒரு சில மதங்கள் மணவாழ்வு ஆத்மீகப் பாட்டுக்கு எதிரானது என்று கூறுவதை



இஸ்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, திருமணத்தை அதிகமதிகம் இஸ்லாம் வலியுறுத்துகின்றது. "உங்களில் வாழ்க்கைத் துணையில்லாத ஆண் பெண்களுக்கு திருமணம் செய்து வையுங்கள். அவர்கள் ஏழைகளாக இருந்தால் தன் நல்லருளைக் கொண்டு அல்லாஹ் வாரி வழங்குவதில் விசாலமானவன்" (24:32)

இந்த வசனத்தில் இறைவன் திருமணம் செய்து வையுங்கள் என்ற ஏவலை பயன்படுத்தியுள்ளதிலிருந்து தங்கள் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைக்கும் பொறுப்பு பெற்றோர்களையே சார்ந்தது என்பது விளங்குகின்றது. குழந்தைகளை நல்லவிதமாக வளர்ப்பதும் அவர்களுக்கு சிறந்த வாழ்க்கைத் துணைகளை அமைத்துக் கொடுப்பதும் நல்ல பெற்றோர்களின் அடையாளமாகும். திருமண வயதை அடைந்தும் ஏழ்மையைக் காரணம் காட்டி திருமணத்தை தள்ளிப் போட வேண்டாம் என்ற வழிமுறையும் காணப்படுகிறது.

நீ காஹ் என்பது எனது வழிமுறை ஆகும். இதனை எவரொருவர் புறக்கணிக்கின்றாரோ அவர் என்னைச் சார்ந்தவரல்ல என்பது நபி மொழி. மேற்கூறிய நபி மொழியிலிருந்து திருமணம் முஸ்லிம்களுக்கு எவ்வளவு அவ்சியமானது என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது.

எனவே உங்களுடைய திருமணம்

தொடரும்....

- நஸ்ரியா -

# செஞ்சிலுவை இயக்கத்தின் வரலாறு

பாகம் : 02




சகல சொத்துக்களையும் இழந்த அவர் ஏறக்குறைய ஒரு மில்லியன் (பத்து லட்சம்) சுவிஸ் பிராங்க் தொகை அளவுக்குக் கடனாளியானார்.

இதனால் அவர் பல இடங்களில் அவமானத்துக்கு உள்ளாக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட இவ் அவமானத்தால் செஞ்சிலுவைக் குழுவில் தான் வகித்த செயலர் பதவியில் இருந்தும், தான் வகித்த அங்கத்துவத்திலிருந்தும் தாமாகவே பதவி விலகிக் கொண்டார். 1867ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08ம் திகதி இவரது பதவி விலகலை செஞ்சிலுவைக் குழு ஏற்றுக் கொண்டது.

அதன் பின் ஜெனீவா நகரை விட்டுப் பாரிஸ் நகரத்திற்குச் சென்ற அவர் அந் நகர வீதியோர இருக்கைகளிலும், பூங்காக்களிலுள்ள இருக்கைகளிலும் படுத்து உறங்கிக் காலத்தைக் கழிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இவ் வேளையில் பட்டத்து அரசி யுயீனா, ஜெனீவா உடன்படிக்கையினை கடலில் நடைபெறும் யுத்தங்களுக்கும் விரிவு படுத்தும் நோக்குடன் இதற்காக யோசனை பெற டூனான்ட் அவர்களுக்கு அழைப்பு விடுக்கவென அவரைத் தேடினார். அவர் ஜெனீவாவில் இல்லை எனவும், அவரது பதவியிலும் அவர் இல்லை எனவும் அவரது ஒற்றர்கள் தகவல் சொன்ன பின், அவரது படைகளை ஒவ்வொரு நாட்டிற்கும் அனுப்பித் தேடினார். கடைசியில் பாரிஸ் நகர வீதி ஒன்றில் அவரைக் கண்டு பிடித்து அரசியின் மாளிகைக்கு அழைத்து வந்தனர். அதன்பின் யுயீனா அரசி ஹென்றி டூனான்ட் அவர்களை ஒவ்வொரு நாட்டிற்கும் அழைத்துச் சென்று அவ் அரசுகளின் தலைவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

அதன் பயனாக டூனான்ட் அவர்கள் ஆஸ்திரியா, ஒல்லாந்து, ஸ்வீடன், பிரஷ்யா மற்றும் ஸ்பானிய நாடுகளின் தேசிய சங்கங்களின் கௌரவ அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

தொடரும்....

டாக்டர் என்.ரவிச்சந்திரன்
கிளை நிறைவேற்று அதிகாரி
திருகோணமலை கிளை, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்




# முகப் பொலிவுக்கு - டிப்ஸ்

இதுவரை இந்த கடலை மாவை குளிக்கும் போது சோப்பிற்கு பதிலாக தான் பயன்படுத்தி வந்தோம். அதே கடலை மாவை வைத்து ஃபேஸ் பேக் செய்தால், கரும்புள்ளிகள், முகப்பரு, பழுப்பு நிற சருமம் போன்றவை நீங்கிவிடும்.

மேலும் சருமத்திற்கு எந்த பாதிப்பையும் தராது.

- 1 - 2 கப் பாலுடன் மஞ்சள் கடலை மாவை சேர்த்து, சற்று கெட்டியான பேஸ்ட் போல் செய்து கொள்ள வேண்டும். வேண்டுமென்றால் இந்த கலவையின் போது சிறிது தேனை சேர்த்து, முகத்தில் தடவி, ஊற வைத்து கழுவி வந்தால், சருமத்தில் வறட்சி ஏற்படாமல் இருக்கும்.
- பாதாமை இரவில் படுக்கும் முன் ஊற வைத்து, பின் காலையில் அதனை நன்கு அரைத்து பேஸ்ட் போல் செய்து, எலுமிச்சை சாற்றை விட்டு, ஒரு டீஸ்பூன் கடலை மாவை சேர்த்து கலந்து, முகத்தில் தடவி, ஊற வைத்து பின் கழுவிட வேண்டும். இதனால் முகத்தில் இருக்கும கரும்புள்ளிகள் நீங்கி, முகம் நன்கு பளிச்சென்று காணப்படும்.



- இந்த ஃபேஸ் பேக்கில் அதிகமான அளவில் ஆன்டி-ஆக்ஸிடன்ட் மற்றும் வைட்டமின் ஈ சத்துக்கள் உள்ளன. முகத்தில் பருக்கள் அதிகமாக இருந்தால், அதற்கு முட்டையின் வெள்ளைக் கருவை நன்கு அடித்து, அத்துடன் ஒரு ஸ்பூன் கடலை மாவை சேர்த்து நன்கு கலந்து, முகத்தில் தடவி, 10 நிமிடம் ஊற வைத்து, பின் கழுவ வேண்டும். இதனால் சருமத்தில் இருக்கும் அதிகப்படியான எண்ணெய் நீங்கி, முகம் அழகாக இருக்கும்.
- தயிரை கடலை மாவுடன் கலந்து முகத்தில் தடவி, ஊற வைத்து பின் குளிர்ந்த நீரில் அலச வேண்டும். கடலை மாவுடன் தயிர் கலந்து ஃபேஸ் பேக் செய்தால், சருமத்தில் எந்த ஒரு பிரச்சனையும் ஏற்படாது. உடலில் அதிகமாக சூடு இருந்தால், அதனை சரிசெய்ய இந்த ஃபேஸ் மாஸ்க் சிறந்தது. ஏனெனில் அதில் உள்ள தயிர் வெப்பத்தை தணித்துவிடும்.

# தாமரைக் கிழங்குக் கறி

**தேவையான பொருட்கள்**

தாமரைக்கிழங்கு- 250கிராம், அப்பச்சோடா – 2 சிட்டிகை, மஞ்சள் தூள் - அரை தே.க, பம்பாய் வெங்காயம் - 1, உள்ளி – 2 பல்லு, தேங்காயெண்ணெய் - 5 மே.க, மிளகாய்த்தூள், மிளகுத்தூள், சோள மா – ஒவ்வொரு தே.க, உப்புத்தூள், ரேஸ்ற் மேக்கர் - அளவிற்கு, வெங்காயப்பூத்தண்டு – 10 , தக்காளி சோஸ் - 2 மே.க

**செய்முறை**



தாமரைக்கிழங்கைத் துப்பரவு செய்து கழுவி ஒரு அங்குல நீளமுள்ள சரிவான துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். வெங்காயப்பூத் தண்டை அளவான துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். பாத்திரத்தில் தாமரைக்கிழங்கை இட்டு அப்பச்சோடா, மஞ்சள் தூள், அளவிற்கு உப்பு என்பவற்றை இட்டு தண்ணீரை அளவிற்கு விட்டு நீர் வற்றும் வரை அவித்தெடுத்துக் கொள்ளவும். பம்பாய் வெங்காயத்தை வட்ட வடிவில் வெட்டி எடுக்கவும். உள்ளியைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். தாச்சியில் எண்ணெயை ஊற்றி கொதித்ததும் வெட்டிய வெங்காயம், உள்ளி என்பவற்றையிட்டு ஓரளவு வதங்கியவுடன் அவித்த கிழங்கை இட்டுக் கிளறி அதனுள் மிளகாய்த்தூள், சோள மா, என்பவற்றையிட்டு நன்கு சேர்த்துக் கொண்ட பின் வெங்காயப்பூ, தண்டையிட்டு சிறிது நேரம் மூடி அவியவிட்டு அளவிற்கு உப்பத்தூள், ரேஸ்ற்மேக்கர், தக்காளி சோஸ் என்பவற்றையிட்டுக் கலந்து கறி திரளத் தொடங்கியதும் இறக்கிக் கொள்ளவும்.

# அழகிய உதடுகள் பெற



தினசரி பெட்ரோலியம் ஜெல்லியை உதடுகளில் தடவி வந்தால் உதடுகள் மென்மையாக மாறும்.

வாரம் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு உதடுகளை வெதுவெதுப்பான மற்றும் குளிர்ந்த தண்ணீரால் ஒத்தடம் கொடுத்து வந்தால் அவை ரோஜா போல மென்மையாக மாறும்.

உதடுகளைக் கடிக்கும் பழக்கம் சிலருக்கு உண்டு. அது தவிர்க்கப்பட வேண்டிய பழக்கம். அதனால் உதடுகள் வறண்டு போகவும், நிறம் மாறி அசிங்கமாகக் காட்சியளிக்கவும் கூடும். எனவே இது தவிர்க்கப்பட வேண்டும்.

மற்றவர்கள் உபயோகிக்கும் லிப்ஸ்டிக்குகளைப் பகிர்ந்து கொள்ளக் கூடாது. அதனால் தொற்றுக் கிருமிகள் பரவ வாய்ப்புண்டு.




# குருப் பெயர்ச்சி (13.06.2014 - 05.07.2015)

***குரு பகவான் வரும் ஜய வருடம் வைகாசி மாதம் 30 ஆம் நாள் 13.06.2014 மாலை 06.03 மணிக்கு மிதுன ராசியில் இருந்து கடக ராசிக்கு மாறுதலாக உள்ளார். 05.07.2015 வரை கடக ராசியில் சஞ்சாரம் செய்யவுள்ளார். குரு பகவான் கடக ராசியில் சஞ்சரிக்கவுள்ளதால் 12 ராசிகளுக்கும் உண்டாக்கக் கூடிய பலா பலன்கள். இவை பொதுவான பலன்களே!***



## மிதுனம்

வெகுளி போல் வெளியில் இருந்தாலும் தன் காரியங்களில் கருத்தாக இருக்கும் உங்களுக்கு குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து அன்யோன்யம் அதிகரிக்கும். குடும்பத் தேவைகள் யாவும் பூர்த்தியாகும். கடன்கள் குறைவடையும். வெளியூர் சென்று பணிபுரியும் வாய்ப்பு அமையும். பதவி உயர்வு கிடைக்கப்பெறும்.

நீண்ட நாள் மருத்துவ சிகிச்சைகள் எடுத்து வருபவர்களுக்கு படிப்படியான முன்னேற்றம் கிடைக்கும்.

சிலருக்கு நிலம் வர்ங்கும் வாய்ப்பு உள்ளது. திருமணமாகாதோர்க்கு திருமணம் தடல்புடலாக அமையும்.

பொருளாதார நிலை எதிர்பார்க்காத அளவு முன்னேற்றம் அடையும். வேலையில் சற்று பளு அதிகரிப்பதுடன், எதிர்பாராத இடமாற்றங்களால் அலைச்சல் ஏற்படலாம்.

பெரியவர்களின் நட்ப கிட்டும். கல்விக்காக வெளியூர் செல்லும் வாய்ப்புக்கள் உள்ளது. மாணவர்கள் நல்ல பெறுபேறு பெறுவதற்கான காலம் இதுவாகும்.

05.07.2015 வரைக்கும் உங்களுக்கு அனைத்தும் சுபமாகவே காணப்படும். தங்களின் அதிர்ஷ்ட நிறம் பச்சை, வெள்ளை ஆகும்.



## கடகம்

நல்ல அறிவாற்றலும், கற்பனைத் திறனும் எதிலும் சிந்தித்து செயல்படும் குணமும் கொண்ட இக் கடக ராசியினருக்கு அவ்வளவு சாதகமான மாற்றம் அல்ல. உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புக்கள் அடிக்கடி வந்து மறையும்.

பண வரவகள் மந்த நிலையிலேயே காணப்படும். எனவே ஆடம்பர செலவுகளை குறைத்துக் கொள்தல் நன்று. கூட்டுத் தொழில் செய்பவர்கள் கூட்டாளிகளால் நன்மை அடைவர். அனைத்து விடயங்களிலும் மிகுந்த கவனத்துடன் செயல்படவும். குடும்ப ஒற்றுமை சுமூகமாகக் காணப்படும். எதிர்பார்க்கப்படும் பதவி உயர்வுகள் சற்று தாமதமாகும். 03.04.2014 ற்குப் பிறகு குரு பகவானினால் இருந்து வந்த பணக் கஷ்டங்கள் ஓரளவு தீரும்.

குடும்ப ஒற்றுமை சிறப்பாக இருக்கும். பூர்வீக சொத்துக்களால் உறவினர்களுடன் மன சஞ்சலங்கள் ஏற்படும். எதிர்பாராத அரச உதவிகள் கிடைக்கப் பெறலாம். பேசும் வார்த்தைகளை மிகக் கவனமாக நிதானத்துடன் பேசுதல் நன்மை பயக்கும்.

வீண் அலைச்சல்கள் ஏற்படலாம். பொருளாதார நிலை தேவைக் கேற்றபடி காணப்படும். புத்திர வழியில் மன சஞ்சலங்கள் ஏற்படலாம். உங்களின் அதிர்ஷ்ட நிறம் வெள்ளை மற்றும் சிவப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வேல் முன்பள்ளிச் சிறார்களின்
# 3வது வருட விளையாட்டுப் போட்டி

வேல் முன்பள்ளிச் சிறார்களின் 3வது வருட விளையாட்டுப் போட்டி கடந்த 27ம் திகதி புனித சூசையப்பர் கல்லூரி விளையாட்டுத் திடலில் வெற்றிகரமாக நடந்தேறியது.

பெற்றோர்களையும் இணைத்தே இவ்விளையாட்டுப் போட்டி நடாத்தப்படுவது சிறப்பானது.

டொம், ஜெரி எனப் பெயர் கொண்ட இரு இல்லங்களைச் சேர்ந்த சிறார்களும் அவர்தம் பெற்றோரும் விளையாட்டுக்களில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

கடந்த இருவருடங்களிலும் சுழல் கோப்பையைத் தனதாக்கிக்கொண்டிருந்த டொம் அணி இவ்வருடமும் வெற்றி பெற்று கோப்பையைத் தமதாக்கிக் கொள்ளும் முனைப்புடன் இவ்வருடத்தில் களம் இறங்கியிருந்தது.

அதேவேளை இவ்வருடமாவது வெற்றியைப் பதிவுசெய்தே தீருவது என்ற எண்ணத்துடன் ஜெரி அணி விடாமுயற்சியுடன் வெற்றிக்காகப் போராடியது.

இறுதியில் அம்முயற்சியில் வெற்றிபெற்று ஜெரி அணி இப்பாடசாலையின் வரலாற்றில் தனது முதலாவது வெற்றியைப் பதிவு செய்தது.

வெற்றிக் கிண்ணத்தை ஜெரி அணிக்கு வழங்கிவைத்த டொம் அணித்தலைவர் அடுத்தவருடம் மீண்டும் தாமே வெற்றியைப் பதிவுசெய்வோம் என தனது உரையில் தெரிவித்தார்.

இப்போட்டிக்கு நடுவர்களாக முன்னாள் தடகள வீராங்கனை செல்வி. மதுனிகா குமார் அவர்களும் அவருக்கு உதவியாக செல்வி. அஜந்தா அவர்களும் செயற்பட்டனர்.


வெற்றிக் கோப்பையைப் பெற்றுக்கொள்ளும் ஜெரி அணித்தலைவி



இரண்டாமிடத்தை வென்ற டொம் அணித்தலைவர் கோப்பையுடன்





மாஸ்டர் வேல் 2014

பில்டிங் ப்ளொக் ரேஸ்



# நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரியின் வீதியோட்டம்

தி/நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரியின் வருடாந்த கல்லூரி தினத்தையொட்டி மாணவ,மாணவிகளுக்கான மாபெரும் வீதியோட்ட நிகழ்வு கல்லூரி முதல்வர் திரு.பெ.ஜயமுத்து தலைமையில் 02.05.2014ம் திகதி காலை 6.30 மணியளவில் வெகு சிறப்பாக ஆரம்பமானது. வகுப்பு அடிப்படையில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இடம்பெற்ற இந்நிகழ்வில் 90ற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பாடசாலை முன்றல் தொடக்கம் இறக்கக்கண்டி பாலம் வரை சென்று திரும்பினர். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக குச்சவெளி கோட்ட கல்வி அதிகாரி திரு.கோ.செல்வநாயகம் அவர்களும், கௌரவ விருந்தினராக நிலாவெளி வைத்தியசாலை வைத்திய கலாநிதி திரு.ச.கோகுலன் அவர்களும் சிறப்பு விருந்தினராக நேசன் ரஸ்ற் வங்கி உதவி முகாமையாளர் திரு.ந.வசீகரன் அவர்களும் கலந்து சிறப்பித்து வெற்றியீட்டிய மற்றும் போட்டியை நிறைவு செய்த வீரர்களுக்கான வெற்றிக்கேடயங்களையும் சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தனர். இந்நிகழ்வின் கனிஸ்ட பிரிவில் (தரம்-6-9 ஆண்கள்) எஸ்.தனுசன், எஸ்.தர்சன், ஜெ. ஜிவிதன் ஆகியோர் முறையே முதல் 3 இடங்களையும், சிரேஸ்ட பிரிவில் (தரம்-10-13 ஆண்கள்) எஸ்.லதுரன், வீ.தனுசன், ஆர்.தர்சன் ஆகியோர் முறையே முதல் 3 இடங்களையும், பெண்கள் பிரிவில் (தரம்-09-13 பெண்கள்) எஸ்.சஜித்தா, யு.சுபாசினி, ரி.திவ்யா ஆகியோர் முறையே முதல் 3 இடங்களையும் பெற்றுக்கொண்டனர்.



# நித்தியபுரி கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுப் போட்டி

நித்தியபுரி கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் திரு.இராமச்சந்திரன் அவர்களின் தலைமையில் அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு.வு.சதீஸ்காந்தன், பொருளாளர் திரு.யு.சிவப்பிரகாசம் மற்றும் உறுப்பினர்களும் இணைந்து மேமாதம் முதலாம் திகதி கிராமிய விளையாட்டுப் போட்டியை நடாத்தினர்.



இந்நிகழ்விற்கு உப்புவெளி பிரதேச சபைத்தலைவரான கௌரவ. திரு.விஜேந்திரன் ஐயா அவர்கள் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக திரு.நிஷாந்தன் அவர்களும், கௌரவ விருந்தினராக திரு.ஏ.கலைச்செல்வன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## சர்வதேசச் செய்திகள்

# கடத்தப்பட்ட மாணவிகளின் நிலை தெரியாது தவிக்கும் பெற்றோர்

கடந்த மாதம் 14ம் திகதி நைஜீரியாவின் கம்போறு நகரில் நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து கடத்திச் செல்லப்பட்ட 276 பாடசாலை மாணவிகளின் நிலைபற்றித் தற்போதுவரை தெரியாது பெற்றோர்கள் கண்ணீரும் கம்பலையுமாக அலைவதாக சிஎன்என் தெரிவித்துள்ளது.

அன்றைய தினம் மதியம் 1.30 மணியளவில் பேஹோ ஹறாம் என்ற ஆயதக் குழு அல்லாஹ்வின் நாமத்தை உச்சரித்தவாறு கண்மூடித்தனமாகத் துப்பாக்கிகளாலும் பீரங்கிகளாலும் சுட்டதில் ஆகக் குறைந்தது 150பேர் கொல்லப்பட்டனர். பலர் உயிருடன் தீவைக்கப்பட்டதாகவும் அச் செய்தி தெரிவிக்கின்றது.

இதையடுத்து அங்கிருந்த பள்ளிக்குச் சென்ற ஆயுததாரிகள் மாணவிகளைப் பலவந்தமாகக் கடத்திச் சென்றுள்ளனர். நைஜீரிய அரசின் ஆதரவாளர்களைப் பலிவாங்கவேண்டும் என்ற முனைப்புடன் இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்கச் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் அவ்வாயுதக் குழுவிற்கு அல்குவேதாவே பயிற்சிகளையும் ஆயுதங்களையும் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கின்றது அச்செய்தி.

# இஸ்லாமிய அவமதிப்பு
# 1000 கசையடி - 10வருட கடூழிய சிறை

வலைப் பதிவேற்றுனர் ஒருவருக்கு 1000 கசை அடிகளையும் 10 வருடக் கடூழியத் தண்டனையையும் விதித்தது சவூதி அரேபிய நீதிமன்றம்.

கடந்த வருடம் யூன் மாதம் கைதான ரவூப் படாவி என்ற இவர் தனது வலைப்பூவில் இஸ்லாமை அவதிக்கும் தகவல்களை ஏற்றியிருந்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட போது 7 வருட சிறைத்தண்டனையையும் 600 கசை அடிகளையும் ஆரம்பத்தில் தண்டனையாகப் பெற்றிருந்தார். எனினும் அவரது மேன்முறையீடு தொடர்பாக ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அவருக்கான தண்டனையை அதிகப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

# ஜஹார்த்தா சர்வதேசப் பாடசாலையில் சிறார்கள் வல்லுறவு

ஜஹார்த்தா சர்வதேசப் பாடசாலையில் சிறுவர்கள் பாலியில் வல்லுறவிற்குள்ளானதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பாசாலையைச் சுத்தமாக்குபவர்கள் பாடசாலையின் கழிவறையில் வைத்தே இவ் வல்லுறவை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரியவந்ததை அடுத்து சுமார் ஆறு சுத்தமாக்குபவர்கள் பணிநீக்கப்பட்டதுடன் விசாரணைகளுக்கும் முகம் கொடுத்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் தனது ஆறு வயது மகன் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டதைக் கண்டுகொண்ட பெற்றோர் ஒருவர் பாடசாலைக்கு மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்து பாடசாலை நிர்வாகம் தாமே உள்ளக விசாரணைகளை மேற்கொள்வதாகவும் இவ் விடயத்தை வெளிச் சொல்ல வேண்டாம் எனவும் அப் பெற்றோரை அறிவுறுத்தியுள்ளது.

ஆனால் தமக்கு நியாயம் மறுக்கப்படும்எனத் தெரிந்த அப்பெற்றோர் காவல்துறை மற்றும் ஊடகங்களுக்கு இவ்விடயத்தைப் பகிரங்கப்படுத்தியவுடன் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பாடசாலையிலேயே இந்தோனேசியச் செல்வந்தப் பிள்ளைகளும் இந்தோனேசியாவில் பணியாற்றும் வெளிநாட்டினரதும் பிள்ளைகளிற் பெரும்பாலானோர் கல்வி கற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# சர்சைக்குரிய கடற் பிரதேசத்தில் சீனப் படகு கைதானது

சர்சைக்குரிய பொதுக்கடல் பிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த சீனப்படகொன்றை பிலிப்பைன்ஸ் நாட்டுக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

ஆபத்தை விளைவிக்காத சுமார் 350 கடல் ஆமைகளை வேட்டையாடிய குற்றச்சாட்டிலேயே இக் கைது நிகழ்ந்துள்ளது.

கைது செய்யப்பட்ட கடற் பிரதேசம் ஏற்கனவே சர்ச்சைக்குரிய பிரதேசமாக இருப்பதுடன் அக்கடற் பிரதேசத்தைத் தனக்கானது எனச் சீனா உரிமைகொள்ளத் தொடங்கியவுடன் அதனை பிலிப்பைன்ஸ், ஜப்பான், தாய்வான் போன்ற நாடுகள் கடமையாக எதிர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கைதான பதினொரு மீனவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனச் சீன வெளியுறவுத்துறை பிலிப்பைன்ஸ் நாட்டரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலகத்தை வரவேற்பறைக்கு மாற்றிய மட்டக்களப்பு ஆணையாளர்

பொதுமக்களின் நலன் கருதி மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் எம். உதயகுமார் தனது அலுவலக அறையை மாநகர வரவேற்பறைக்கு மாற்றிக்கொண்டுள்ளார்.

இந்த வகையில் கடந்த புதன்கிழமை (07) மாநகர சபை ஆணையாளர் மாநகர சபையின் முன்னாலுள்ள வரவேற்பறை பகுதியில் அமர்ந்து பொதுமக்களின் குறைகள் மற்றும் தேவைகளை கேட்டறிந்தார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளரின் அறை மாநகர சபை மேல் மாடியில் அமைந்துள்ளது. இங்கு வருகை தரும் பொதுமக்கள் மாநகர ஆணையாளரை சந்திக்க வேண்டுமாயின் மேல் மாடிக்கு செல்ல வேண்டியுள்ளது.

இதனால் பொது மக்கள் சிரமங்களை எதிர் கொண்டு வந்த நிலையிலேயே இவ்வாறு தனது அறையை புதன்கிழமைகளில் வரவேற்பறைக்கு மாற்றியுள்ளார்.

கடந்த புதன்கிழமையும் (30) ஆணையாளர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இனி யாரையும் தண்டிக்க மாட்டேன்

சர்ச்சையில் சிக்கி தொழில் இடமாற்றத்தைப் பெற்றுச் சென்றுள்ள செருப்புமாலை ஆசிரியர் இனித் தான் யாரையும் தண்டிக்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இத் தண்டனையினால் நானும் ஒரு பாடத்தைக் கற்றுக் கொண்டுள்ளேன் எனத் தெரிவித்துள்ள அவர் தனது கற்பித்தல் நடவடிக்கைகளில் கூட எக்காரணத்தைக் கொண்டும் யாரையும் தண்டிக்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

13

மாணவர்களும் ஊடகவியலாளர் ஆகலாம்......
அழையுங்கள் - 0754252042

# வாகரை காணிக் குத்தகையில் முறைகேடு

## சி.சந்திரகாந்தன் குற்றச்சாட்டு



மட்டக்களப்பு மாவட்டம் வாகரை பிரதேசத்தில் அரசாங்கக் காணிகளை தனியாருக்கு நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதில் முறைகேடுகள் காணப்படுவதாக முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகர்களில் ஒருவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் குற்றம் சாட்டுகின்றார் என பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

வாகரைப் பிரதேசத்தில், நன்னீர் உயிரினங்கள் வளர்ப்பு திட்டத்திற்காக தம்பிரான்வெளி, காயான்கேணி மற்றும் குருவிக்கல்மலை ஆகிய இடங்களில் 2300 ஏக்கர் காணியை தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்க மாவட்ட காணி பயன்பாட்டு குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளருக்கு அரசாங்க அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்தத் தீர்மானம் பிரதேச மற்றும் மாவட்ட காணி பயன்பாட்டு குழுக்களில் விவாதிக்கப்படாமல் அரசாங்க அதிபரால் தன்னிச்சையாக எடுக்கப்பட்டுள்ளதாக கூறும் முன்னாள்

13

# திருகோணமலைப் புதைகுழி - சந்தேகப்படுபவர்கள் நீதிமன்றத் துணையை நாடலாம்



திருகோணமலைக் திருக்கோணேஸ்வரத்தின் முன்றில் மக்ஹெய்சர் விளையாட்டரங்கில் கண்டு பிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் மேலதிக விசாரணைக்காக கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்ட பின்னர் அவ்விடயம் தொடர்பாக எவ்வித செய்திகளும் வெளிவராதுள்ளது.

எனினும் இவ்விடயம் தொடர்பாக திருகோணமலை மக்கள் 1990ம் ஆண்டில் கைதாகிக் காணாமற் போன இளைஞர்கள் உடைய மனித எச்சங்கள் இவையாக இருக்கலாம் என்ற சந்தேகத்தைக் கிளப்பியுள்ளனர்.

# வாகனம் மோதி சிறுமி மரணம்

கடந்த 03.05.2014 சனிக்கிழமையன்று நிலாவெளி,10ம் கட்டை,கோபாலபுரத்தைச் சேர்ந்த 15 வயது பாடசாலை மாணவி ஒருவர் வாகன விபத்துக்குள்ளாகிய சம்பவம் அக்கிராமத்தை மிகவும் வேதனைக்குள்ளாக்கியுள்ளது.



சின்னத்தம்பி விஜயநாதன் (வயது 39),சுதாஜினி(வயது39) ஆகியோரின் இரண்டாவது மகளாகிய தி/கோபாலபுரம் தமிழ் வித்தியாலயத்தில் 11ம் தரத்தில் கல்வி பயிலும் லதிகா என்பவரே இச்சம்பவத்தில் பலியாகியுள்ளார். சனிக்கிழமை மாலை 5.45 மணியளவில் சாலையோரமாக நடந்து கடைக்குச் சென்றுகொண்டிருந்தவேளை இறக்கக்கண்டியில் இருந்து திருமலை பட்டணம் நோக்கி வந்த வாகனம்(buddy) சிறுமியின் பின்புறமாக மோதியதில் படுகாயத்திற்குள்ளாகிய நிலையில் நிலாவெளி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து திருமலைப் பொதுவைத்தியசாலைக்கு

13

# மட்டக்களப்பில் பெரும் புற்றுநோய் வைத்தியசாலை

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விஷேட வேலைத் திட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலில் சுகாதார அமைச்சின் 450 மில்லியன் ரூபாய் செலவில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அதி நவீன வசிதிகளுடன் 4 மாடிகளை கொண்ட தனியான புற்று நோய் வைத்தியசாலை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் முதற்தடவையாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அருகாமையில் தனியான கட்டிடத்தில் 4




மா'டிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுவரும் இப் புற்று நோய் வைத்தியசாலையின் அபிவிருத்தி பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றது.

துரித கதியில் இடம் பெறும் அபிவிருத்திப் பணிகளை பார்வையிட மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின்

13

விளம்பரம் செய்யுங்கள்
வியாபாரத்தைப் பெருக்குங்கள்
அழைபேசி - 075-2954733

# "மட்டு. ஊடகவியலாளரும் த.தே.கூவின் உருவாக்கத்திற்காக உயிர்கொடுத்தவர்களே"

நாம் எமது மக்களுக்காக விடுதலை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக எமக்குள் இருக்கும் பகைமை உணர்வை மறந்து விட்டு ஒன்றாகச் சேர்வதன் மூலம் தான் இதனை எட்ட முடியும் எமது பாதைகள் வேறாக இருக்கலாம் எமது பயணம் ஒன்றாக இருக்க வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள டெலோ அலுவலகத்தில் நடைபெற்ற ஸ்ரீசபாரத்தினம் 28 நினைவு தினத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உபவேந்தர் மீது குற்றச்சாட்டு

மூடப்பட்டுள்ள கிழக்கு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்று வரும் பிரச்சினைகள் குறித்து மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் விளக்கம் அளித்துள்ளனர். இவ்விளக்கத்தை மாணவர்கள் ஊடக அறிக்கை ஒன்றின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு,

பல்கலைக்கழகத்தில் மாணவர் [illegible] மாணவர் ஒன்றியத்தை முடக்கும் செயற்பாடுகளையும் முன்னெடுத்து மாணவர் நலனில் அக்கறை செலுத்தாமல் தனது ஆதாயத்துக்காக உபவேந்தர் செயற்பட்டு வருவது கண்கூடாக தெரிகிற்து.

கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் அவர்கள் கடந்த இரண்டு வருடங்களாக பாரிய அபிவிருத்தி நடைபெறுவதாக வெளித்தோற்றத்தை காட்டுகிறார். ஆனால் இந்த பல்கலக்கழகத்தில் நடைபெறுவது என்ன?பல்கலைக்கழக அபிவிருத்தி என்பது எதனில் தங்கியுள்ளது. மாணவர்களின் கல்வித்தரத்திலா இல்லை புதிதாக திறக்கப்படும் கட்டிடங்களிலா?

இங்கே உதாரணமாக கலை கலாசார பீட

13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org